# பகுதி II

## 2. வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான தகவல்களும்

### 2.1 வினாத்தாள் I உம் அதற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான தகவல்களும்

#### 2.1.1. வினாத்தாள் I - கட்டமைப்பு

**நேரம் : 1 மணித்தியாலம் மொத்தப்புள்ளிகள் 40**

- ⋆ நான்கு விடைத் தெரிவுகளைக் கொண்ட 40 பல்தேர்வு வினாக்களைக் கொண்டது. ஒவ்வொரு வினாவுக்கும் தரப்பட்ட (1), (2), (3), (4) விடைகளுள் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்தல் வேண்டும்.
- ⋆ முழுப் பாடப்பரப்பையும் உள்ளடக்கி வினாக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.
- ⋆ எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

PAST PAPERS WIKI

## 2.1.2. வினாத்தாள் I

**1.** ஒரு நாட்டின் நிகழ்காலமும் எதிர்காலமும் நிச்சயமாக அதன் இறந்தகாலத்தின் மீது கட்டியெழுப்பப்படுவதாகக் குறிப்பிட்டவர்

(1) சேர் வின்சன்ட் சேர்ச்சில் ஆவார். (2) ஈ. எச். கார் ஆவார்.
(3) ஸ்ரீ ஜவகர்லால் நேரு ஆவார். (4) ஆபிரகாம் லிங்கன் ஆவார்.

**2.** இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் பற்றிய தகவல்களைத் தேடும் ஒருவருக்கு முக்கியமான மூலாதாரம் பின்வருவனவற்றுள் எது ?

(1) கல்வெட்டுகள் (2) கிராமியக் கதைகள்
(3) குகை ஓவியங்கள் (4) கற்கருவிகள்

**3.** இலங்கையின் புத்தசாசன வரலாற்றைக் கற்கும்போது முக்கியமானதாய் அமையும் இலக்கிய மூலாதாரம்

(1) ராஜாவலி (2) நிக்காய சங்கிரக
(3) தர்ம பிரதீபிகா (4) சத்தர்மரத்னாவலி

**4.** எமது தொல்பொருட்சான்றுகளைப் பாதுகாத்தல் மிக முக்கியமானது. ஏனெனில், அவை

(1) கடந்தகாலத்துக்குரியன என்பதனாலாகும்.
(2) விலை மதிப்பற்றவை என்பதனாலாகும்.
(3) நாட்டின் பண்பாட்டுப் பாரம்பரியத்தை வெளிப்படுத்த ஏதுவானவையாக அமைவதனாலாகும்.
(4) வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்குக் காண்பிக்கக்கூடியவை என்பதனாலாகும்.

**5.** கி.பி. 5ஆம் நூற்றாண்டில் அனுராதபுரக் காலத்து அரசர்குலப் பெண்களின் ஆடை, அணிகலன்கள் பற்றிய விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளக்கூடிய மூலாதாரத்துக்கு உதாரணமாய் அமைவது,

(1) சிகிரியா ஓவியங்களாகும். (2) திவங்க படிமாகரத்து ஓவியங்களாகும்.
(3) தெகல்தொறுவ விகாரை ஓவியங்களாகும். (4) களனி விகாரையின் ஓவியங்களாகும்.

**6.** பௌத்த சமயம் இலங்கையில் பரவிய அனுராதபுரகால ஆரம்பத்தில் பரவலாகக் காணக்கூடியது

(1) தூண் கல்வெட்டுகள் (2) குகைக் கல்வெட்டுகள்
(3) பாறைக் கல்வெட்டுகள் (4) துண்டுக் கல்வெட்டுகள்

**7.** இலங்கை தொடர்பான தகவல்களை வெளியிட்ட வெளிநாட்டு எழுத்தாளர்களின் அதிகளவான கவனத்தைப் பெற்றிருப்பது,

(1) இந்நாட்டில் நிலவிய வர்த்தகம் ஆகும்.
(2) இங்கு பரவியிருந்த சமயங்கள் ஆகும்.
(3) அனுராதபுரத்தில் ஆட்சி செலுத்திய ஆட்சியாளர்கள் ஆவர்.
(4) காலத்துக்குக் காலம் இந்நாட்டின்மீது மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்புகள் ஆகும்.

**8.** புராதன இலங்கையர் நீர்ப்பாசன நடவடிக்கைகளுக்காக பெரிதும் பயன்படுத்திய மகாவலி கங்கையுடன் **தொடர்புபடாத** நீர்ப்பாசன நிர்மாணிப்பு யாது ?

(1) எலஹர கால்வாய் (2) அங்கமதில்ல கால்வாய்
(3) ரிதீபந்தி கால்வாய் (4) மினிப்பே கால்வாய்

**9.** யோதக் கால்வாய் அல்லது ஜய கங்கை அதி சிறந்ததொரு நீர்ப்பாசன நிர்மாணிப்பாகக் கருதப்படக் காரணமென்ன ?

(1) கால்வாயின் அடிப்பகுதியிலுள்ள மென்சாய்வு
(2) கால்வாயினூடாக நீண்டதூரத்திற்கு நீர் கொண்டு செல்லப்படல்
(3) கலாவாவியையும் திசாவாவியையும் இணைத்தல்
(4) பல சிறு குளங்களுக்கு நீர்வழங்கல்

**10.** மேல்வரும் வரலாற்றுச் சம்பவங்களை அவற்றின் காலக்கிரம வரிசை ஒழுங்கில் காட்டும் சரியான விடை யாது ?

A – திரிபிடகம் நூலாக்கம் பெறல்
B – கலிங்க-மாகன் பொலன்னறுவையை ஆக்கிரமித்தல்
C – ஸ்ரீமாபோதி மரக்கிளை நடப்படல்
D – சீகிரியா கோட்டை நிர்மாணிக்கப்படல்

(1) C, A, D, B (2) C, B, A, D (3) C, D, A, B (4) C, D, B, A

PAST PAPERS WIKI

**11.** அனுராதபுர காலத்தின் ஆரம்பத்தில் இந்திய-இலங்கை தொடர்புகளில் முக்கிய அம்சமாகக் காணப்பட்டது

(1) வர்த்தக தூதுவர்களின் பரிவர்த்தனை (2) யுத்த உதவிகளைப் பெற்றுக்கொள்ளல்
(3) ஆக்கிரமிப்பு (4) புலம்பெயர்தல்

**12.** அனுராதபுரக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது தூபி,

(1) ரத்னமாலி சைத்தியம் (2) தூபாராம சைத்தியம்
(3) திஸ்சமகாராம சைத்தியம் (4) மஹியங்கனை சைத்தியம்

**13.** யாழ்ப்பாண ராசதானியின் பிரதான இந்து சமய நிலையமாகவும் தலைநகராகவும் காணப்பட்டது

(1) வல்லிபுரம் (2) சாவக்கச்சேரி (3) கந்தரோடை (4) நல்லூர்

**14.** அனுராதபுரத்து ரண்மஸு உயனவுக்கும் குட்டம் பொய்கைக்கும் நிலக்கீழ் குழாய் வழியாக பின்வருவனவற்றுள் எந்தக் குளத்திலிருந்து நீர் கொண்டு செல்லப்பட்டதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது ?

(1) பசவக்குளம் வாவி (2) திசாவாவி (3) நுவர வாவி (4) நாச்சதூவ வாவி

**15.** 'பட்டணம்' (பட்டுன்கம்) என்பது,

(1) வர்த்தக நகரங்களை அண்டிய குடியிருப்புகளாகும்.
(2) பல்வேறு கைத்தொழில்களுக்குப் பிரசித்தமான குடியிருப்புகளாகும்.
(3) சிறு குளங்களுக்கருகில் அமைந்த குடியிருப்புகளாகும்.
(4) ஆற்றுமுகம் சார்ந்த துறைமுகத்தை அண்டிய குடியிருப்புகளாகும்.

**16.** மேல்வருவனவற்றுள் முதலாம் விஜயபாகு பொலன்னறுவைக் காலத்தின் ஒரு சிறந்த மன்னனாகக் கருதப்படுவதற்கு அடிப்படையான பிரதான காரணம் எது ?

(1) வழிபாட்டு இடங்கள் புனரமைக்கப்பட்டமை
(2) வெளிநாட்டு ஆதிக்கத்திலிருந்து நாட்டை விடுவித்துக் கொண்டமை
(3) விவசாயத்தை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தமை
(4) அயல் நாடுகளுடன் நட்புறவுடன் செயற்பட்டமை

**17.**
- கோட்டையில் பாதுகாப்பு அரணொன்றை நிர்மாணித்தல்
- கம்பளை மூன்றாம் விக்கிரமபாகு மன்னனின் பிரதம மந்திரியாக அரச நடவடிக்கைகளை முன்னெடுத்தமை
- யாழ்ப்பாண ஆரிய சக்கரவர்த்தி மன்னனின் வரி சேகரிப்பு அதிகாரிகளுக்கு எதிராகச் செயற்பட்டமை

மேலேயுள்ள வரலாற்றுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்

(1) இளவரசன் சப்புமல் (2) இளவரசன் அம்புலுகல
(3) சேனாலங்காதிகார தளபதி (4) நிஸ்சங்க அளகக்கோனார்

**18.** மேல்வரும் எந்தப் போரில் போர்த்துக்கேயர் கீழைத்தேய இனமொன்றினால் படுதோல்வி அடைந்தனர் ?

(1) தந்துரே போர் (2) முல்லேரியாப் போர் (3) ரந்தெனிவெல போர் (4) கன்னொறுவ போர்

**19.** ஒல்லாந்தர் ஆட்சியால் இலங்கைக்குக் கிடைத்த இரண்டு விளைவுகளைக் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.

A – கறுவா, தோட்டப் பயிர்ச்செய்கையாக ஒழுங்கமைக்கப்பட்டமை
B – பொருட்களின் போக்குவரத்துக்கு கால்வாய் போக்குவரத்து பயன்படுத்தப்பட்டமை
C – பைலா-கபிரிஞ்ஞா இசைக்கலை பிரபல்யம் அடைந்தமை
D – றோமன் கத்தோலிக்க சமயம் பரவியமை

(1) A, B (2) B, C (3) B, D (4) C, D

**20.** புதிய பரம்பரை பரிபாலனமொன்றை ஏற்படுத்தி கண்டி ராசதானிக்கு உறுதியானதொரு அடித்தளத்தை இட்டவர்

(1) சேனாசம்பத விக்கிரமபாகு (2) முதலாம் விமலதர்ம சூரியன்
(3) இரண்டாம் ராஜசிங்கன் (4) கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன்

**21.** ஒல்லாந்தர் தமது கீழைத்தேய தலைமையகமாக மேல்வருவனவற்றுள் எந்த நகரத்தைத் தெரிவுசெய்தனர் ?

(1) கோவா (2) பாண்டிச்சேரி (3) பற்றேவியா (4) மதராஸ்

PAST PAPERS WIKI

**22.** பிரித்தானியர்களுக்கு இலங்கையைக் கைப்பற்ற வேண்டுமென்ற எண்ணம் உருவாவதிற் செல்வாக்குச் செலுத்திய பிரதான காரணி யாது ?

(1) திருகோணமலை துறைமுகத்தின் அமைவு
(2) இலங்கைக் கறுவாவின் உயரிய தன்மை
(3) பெருந்தோட்டப் பயிர்களுக்கான இடத்தைப் பெற்றுக்கொள்ளல்
(4) கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புதல்

**23.** பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் 'உடல்வரி' விதித்த ஆளுனர்

(1) பிரட்ரிக் நோர்த் (2) தோமஸ் மெயிட்லண்ட்
(3) வில்லியம் கிரகரி (4) டொரிங்டன் பிரபு

**24.** அரசியலமைப்புச் சபைக்கு மாகாண மட்ட தேர்தல் தொகுதிகளினடிப்படையில் அங்கத்தவர்களைத் தெரிவுசெய்தல் ஆரம்பிக்கப்பட்டது எந்த அரசியலமைப்புச் சீர்திருத்தத்தினாலாகும் ?

(1) கோல்புறூக் (2) குறூவ்-மக்கலம் (3) மனிங் (4) டொனமூர்

**25.** மேல்வருவனவற்றுள் சோல்பரி அரசியல் யாப்பு நடைமுறைப்படுத்தப்பட்டதன் பின்னர் இலங்கையிலேற்பட்ட மாற்றம் எது ?

(1) சர்வஜன வாக்குரிமை வழங்கப்படல்
(2) பாராளுமன்ற முறை அறிமுகம் செய்யப்படல்
(3) நிறைவேற்றதிகார நிர்வாகக்குழுமுறை ஆரம்பிக்கப்பட்டமை
(4) அரச கழகம் நிறுவப்பட்டமை

**26.** 1978 அரசியல் யாப்புக்கமைய தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவொரு விடயம் தொடர்பாக முடிவெடுப்பதற்கான அதி ஜனநாயகம் மிக்க முறையாவது

(1) வெகுஜன ஊடகங்களின் மூலம் பொதுசன அபிப்பிராயம்
(2) பாராளுமன்றத்தில் விவாதித்தல்
(3) மக்கள் கருத்துக்கணிப்பு ஒன்றை நடத்துதல்
(4) உச்ச நீதிமன்ற தீர்மானத்துக்கமைய செயற்படல்

**27.** மேல்வருவனவற்றுள் இந்தியாவின் வடமேல் பகுதி வெளி உலகுடன் தொடர்புகளைப் பேணுவதில் செல்வாக்குச் செலுத்தியுள்ள பிரதானமான புவியியல் பௌதிகப் பண்பு யாது ?

(1) கணவாய் வழி (2) பாலைவனங்கள் (3) மலைத்தொடர்கள் (4) ஆறுகள்

**28.** மகதப் பேரரசனுடன் தொடர்புடைய மேல்வரும் நிகழ்வுகளை அவற்றின் காலக்கிரம வரிசையில் ஒழுங்குபடுத்தினாற் கிடைக்கும் சரியான விடை யாது ?

A – தனநந்தனின் ஆட்சிக்காலத்தில் வட இந்தியாவில் மிகப் பெரிய பிரதேசமொன்றில் மகத இராச்சியம் பரவலடைதல்
B – பிம்பிசார மன்னனால் அங்கதேசம் மகத இராச்சியத்துடன் இணைத்துக் கொள்ளப்படல்
C – மகத இராச்சியத்தின் தலைநகரம் பாடலிபுரத்துக்கு மாற்றப்படல்
D – மகத இராச்சியத்தின் அதிகாரம் மௌரிய அரச பரம்பரைக்குக் கிடைத்தல்

(1) B, A, C, D (2) B, C, A, D (3) C, A, B, D (4) C, B, A, D

**29.** அசோகன், மகா அக்பர் ஆகிய இரு ஆட்சியாளர்களினதும் கொள்கைகளின் பொதுப்பண்பாவது:

(1) இந்தியாவுக்கு வெளியே பேரரசுகளை விஸ்தரிக்காமை
(2) இலங்கையுடன் அரசியல், கலாசார தொடர்புகளைப் பேணியமை
(3) சமய சகிப்புக் கொள்கையைக் கடைப்பிடித்தமை
(4) தமது அதிகார பலத்தைக் காட்டுவதற்காக நாட்டுக்குள் தூண்களை நிர்மாணித்தமை

**30.** சோவியத் ரஷ்யாவுக்கு முதன் முதலில் சோசலிசத்தை அறிமுகம் செய்தவர்

(1) விளடிமிர் லெனின் (2) லியோன் ட்ரோஸ்கி
(3) பெலகானொவீ (4) மார்தோவ்

PAST PAPERS WIKI

**31.** ஹிட்லரின் அரசியல் சிந்தனை

(1) நாசிசவாதம் (2) முதலாளித்துவம்

(3) பாசிசவாதம் (4) சமூகவுடைமைவாதம்

**32.** முதலாளித்துவ வகுப்பு, தொழிலாளர் வகுப்பு என சமூகப் பிரிவினை ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்தியது

(1) நிலப்பண்ணை உரிமை முறை (2) மறுமலர்ச்சி

(3) காலனித்துவ ஆட்சி (4) கைத்தொழில் புரட்சி

**33.** பல நூற்றாண்டுகளாக உறுதியுடன் நிலவிவந்த சீன சமூகம் மேல்வரும் எந்த நிகழ்வின் விளைவாக வேகமாக மாற்றமடைய ஆரம்பித்தது ?

(1) குவோ மிங் டான் கட்சியில் செல்வாக்குடையவனாதல்

(2) நீண்ட நடைப்பயணம்

(3) பாரிய முன் பாய்ச்சல்

(4) பண்பாட்டுப் புரட்சி

**34.** சீனக் கூட்டரசின் முதலாவது ஜனாதிபதி

(1) சுன்-யத்-சென் (2) சியங்-காய்-செக்

(3) யுவாங்-ஷி-காய் (4) மாஓ-சே-துங்

**35.** ஜப்பானின் நிலவுடைமை முறையை இல்லாதொழித்தவர்

(1) நொபுனகா (2) ஹிதேயோஷி

(3) டொகுகாவா இயா ஷு (4) முட்சுஹிதோ பேரரசன்

**36.** 'டயட் சபை' மேல்வரும் எந்த நாட்டின் சட்டத்துறை ?

(1) சீனா (2) ஜப்பான் (3) கொரியா (4) இஸ்ரேயில்

**37.** மேற்கு ஐரோப்பிய நாடுகளின் பாதுகாப்பிற்காக அமெரிக்க ஐக்கிய ராச்சியத்தின் தலைமையில் அமைக்கப்பட்ட அமைப்பு யாது ?

(1) நேட்டோ (2) சார்க் (3) அணிசேரா நாடுகள் (4) வோர்ஸோ

**38.** மேல்வரும் ரகசிய ஒற்றர் சேவைகளைக் கொண்ட நாடுகளை ஒழுங்குமுறையில் காட்டும் விடை யாது ?

| | |
|---|---|
| (i) மத்திய ரகசியப் புலனாய்வு அமைப்பு (CIA) | A – இஸ்ரேயில் |
| (ii) மொசாட் அமைப்பு (MOSSAD) | B – சோவியத் ஒன்றியம் |
| (iii) K.G.B உளவுச் சேவை | C – ஜேர்மனி |
| | D – அமெரிக்க ஐக்கிய அரசுகள் |

(1) A, D, B (2) A, D, C (3) C, B, A (4) D, A, B

**39.** மொன்ற்றெஸ்கியூ, வொல்ற்ரேயர், ரூசோ ஆகியோரின் கருத்துகளால் மேல்வரும் எந்த வரலாற்று நிகழ்வுக்கான சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டது ?

(1) ரஷ்யப் புரட்சி (2) சீனப் புரட்சி

(3) பிரான்சியப் புரட்சி (4) அமெரிக்க சுதந்திரப் போர்

**40.** 1948 'வெல்பர் பிரகடனத்தினால்' உருவாக்கப்பட்ட புதிய அரசு

(1) இஸ்ரேயில் (2) குரேஷியா (3) யூகோஸ்லாவியா (4) பலஸ்தீனம்

* * *

PAST PAPERS WIKI

2.1.3 **வினாத்தாள் I இற்கான எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

| வினா இல. | விடை | வினா இல. | விடை |
|---|---|---|---|
| 01. | 3 | 21. | 3 |
| 02. | 4 | 22. | 1 |
| 03. | 2 | 23. | 4 |
| 04. | 3 | 24. | 3 |
| 05. | 1 | 25. | 2 |
| 06. | 2 | 26. | 3 |
| 07. | 1 | 27. | 1 |
| 08. | 3 | 28. | 2 |
| 09. | 1 | 29. | 3 |
| 10. | 1 | 30. | 3 |
| 11. | 4 | 31. | 1 |
| 12. | 2 | 32. | 4 |
| 13. | 4 | 33. | 4 |
| 14. | 2 | 34. | 3 |
| 15. | 4 | 35. | 4 |
| 16. | 2 | 36. | 2 |
| 17. | 4 | 37. | 1 |
| 18. | 2 | 38. | 4 |
| 19. | 1 | 39. | 3 |
| 20. | 2 | 40. | 1 |

**அட்டவணை 05**

ஒரு விடைக்கு 02 புள்ளிகள் வீதம் மொத்தமாக 80 புள்ளிகள்

வினாத்தாள் I இற்கான இறுதிப் புள்ளிகள் $= \frac{80}{2} = \mathbf{40}$

PAST PAPERS WIKI

2.1.4 வினாத்தாள் I இற்கு விடையளித்த விதம் பற்றிய அவதானிப்பு (பாடப்பரப்புக்கேற்ப)



| பாடப்பரப்பு | வினாக்களின் எண்ணிக்கை | இலகுதன்மை கூடிய வினா இலக்கமும் அதன் இலகுச்சுட்டியும் | இலகுதன்மை குறைந்த வினா இலக்கமும் அதன் இலகுச்சுட்டியும் |
|---|---|---|---|
| இலங்கை வரலாறு | 25 | 13 (83%) | 15 (32%) |
| உலக வரலாறு | 15 | 29 (70%) | 30 (12%) |




2015 ஆம் ஆண்டு வரலாறு வினாத்தாள் I இல் இலங்கை வரலாறு தொடர்பில் 25 வினாக்களும், உலக வரலாறு தொடர்பில் 15 வினாக்களும் உள்ளடங்கியுள்ளன. இலங்கை வரலாற்றின் மொத்த இலகுதன்மை 53% ஆகும். உலக வரலாற்றின் மொத்த இலகுதன்மை 50% ஆகும்.

இலங்கை வரலாற்றில் மொத்த இலகுதன்மையில் தரம் 6-11 வரை சித்திரம், வரலாறு, புத்தசமயம் போன்ற பாடநூல்களில் இந்த விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளமை தாக்கம் செலுத்தியுள்ளது. கூடிய அறிவினைப் பெற்றுள்ள வினாக்களின் இலகுதன்மை உயர் மட்டத்தில் உள்ளது. இலங்கையின் அமைவிடம், வரலாற்றுக்கு முற்பட்ட கால இடங்கள், அது தொடர்பான பொருளாதார, சமய, சமூக நிகழ்வுகள், அதனுடன் தொடர்புடைய அரசர்கள் என்பவன பற்றிய தகவல்களைப் பெறக்கூடிய மூலாதாரங்கள், தேசிய இயக்கத்துடன் தொடர்புடைய தலைவர்கள் ஆகியவை தொடர்பான அறிவை அடிப்படையாகக் கொண்டு வினாக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

உலக வரலாறு தொடர்பான வினாக்களின் இலகுதன்மை 50% ஆகும். இதில் இந்தியாவுக்கு ஆரியர்களின் வருகை, அதனுடன் தொடர்புடைய புவியியல் அமைப்பு, இந்தியாவின் சிரேஷ்ட ஆட்சியாளர்கள் ஐரோப்பிய மறுமலர்ச்சியுடன் தொடர்பான சமூக, பொருளாதார, அரசியல் மாற்றம், தென்கிழக்கு ஆசிய நாடுகளாக சீனா, யப்பான், இந்தியா ஆகிய நாடுகளின் ஆட்சியாளர்கள், அவர்களது செயற்பாடுகள், உலக யுத்தங்களின் பின்னரான விளைவுகள் என்பன இப்பகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளன. உலக வரலாற்றில் பல்வேறு நிகழ்வுகள் இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் வரலாற்றில் பல்வேறு சந்தர்ப்பங்களில் தாக்கம் செலுத்தியுள்ள விதம் என்பன இலகுதன்மையில் தாக்கம் செலுத்தியுள்ளது.

PAST PAPERS WIKI

2.1.5 வினாத்தாள் I இல் ஒவ்வொரு வினாவுக்குமுரிய விடைத் தெரிவுக்கான துலங்கலை வழங்குவதில் மாணவர் சதவீதம்

| வினா இலக்கம் | சரியான தெரிவு | ஒவ்வொரு தெரிவும் செய்யப்பட்ட மாணவர் சதவீதம் | | | | Missing |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | |
| 1 | 3 | 7% | 30% | **51%** | 12% | - |
| 2 | 4 | 30% | 5% | 10% | **54%** | - |
| 3 | 2 | 15% | **38%** | 28% | 19% | - |
| 4 | 3 | 19% | 12% | 67% | 2% | - |
| 5 | 1 | **70%** | 12% | 11% | 7% | - |
| 6 | 2 | 21% | **39%** | 15% | 24% | - |
| 7 | 1 | **68%** | 6% | 7% | 18% | - |
| 8 | 3 | 17% | 25% | **44%** | 14% | - |
| 9 | 1 | **41%** | 24% | 17% | 18% | - |
| 10 | 1 | **36%** | 15% | 31% | 17% | - |
| 11 | 4 | 30% | 13% | 23% | **33%** | - |
| 12 | 2 | 4% | **82%** | 5% | 9% | - |
| 13 | 4 | 7% | 4% | 7% | **83%** | - |
| 14 | 2 | 23% | **55%** | 11% | 11% | - |
| 15 | 4 | 37% | 15% | 16% | **32%** | - |
| 16 | 2 | 14% | **60%** | 18% | 8% | - |
| 17 | 4 | 19% | 10% | 17% | **55%** | - |
| 18 | 2 | 11% | **70%** | 9% | 9% | - |
| 19 | 1 | **40%** | 13% | 23% | 24% | - |
| 20 | 2 | 17% | **38%** | 13% | 32% | - |
| 21 | 3 | 27% | 9% | **54%** | 9% | - |
| 22 | 1 | **66%** | 16% | 8% | 10% | - |
| 23 | 4 | 13% | 15% | 13% | **58%** | - |
| 24 | 3 | 14% | 23% | 37% | 26% | - |
| 25 | 2 | 26% | **41%** | 18% | 15% | - |
| 26 | 3 | 11% | 17% | **54%** | 17% | - |
| 27 | 1 | **65%** | 7% | 15% | 13% | - |
| 28 | 2 | 16% | **60%** | 12% | 11% | - |
| 29 | 3 | 10% | 12% | **70%** | 8% | - |
| 30 | 3 | 55% | 20% | **12%** | 13% | - |
| 31 | 1 | **67%** | 8% | 15% | 9% | - |
| 32 | 4 | 28% | 10% | 9% | **53%** | - |
| 33 | 4 | 19% | 20% | 35% | **27%** | - |
| 34 | 3 | 30% | 16% | **22%** | 32% | - |
| 35 | 4 | 14% | 16% | 36% | **34%** | - |
| 36 | 2 | 18% | **68%** | 7% | 7% | - |
| 37 | 1 | **53%** | 19% | 16% | 12% | - |
| 38 | 4 | 13% | 11% | 15% | **61%** | - |
| 39 | 3 | 25% | 12% | **51%** | 12% | - |
| 40 | 1 | **53%** | 9% | 21% | 17% | - |

PAST PAPERS WIKI

**அட்டவணை 06**

ஒவ்வொரு வினாவிற்கும் சரியான விடையைத் தெரிவு செய்த மாணவர் சதவீதம் நிழற்றிக் காட்டப்பட்டுள்ளது.

2.1.6. **வினாத்தாள் I இற்கு விடையளித்தல் தொடர்பான முழுமையான அவதானிப்பும் முடிவும் ஆலோசனைகளும் :**

2015 ஆம் ஆண்டு வரலாற்று வினாத்தாள் I இல் இலங்கை வரலாற்றுப் பகுதியில் 25 வினாக்களும், உலக வரலாற்றுப் பகுதியில் 15 வினாக்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

I ஆம் வினாத்தாளில் இலகுதன்மை 60% ஐ அதிகரித்த வினாக்கள் 13 ஆகும். அவற்றில் இலங்கை வரலாற்றில் 4, 5, 7, 12, 13, 18, 22 ஆகிய வினாக்களும், உலக வரலாற்றில் 27, 28, 29, 31, 36, 38 ஆகிய வினாக்களும் உள்ளடங்கும். இவற்றில் இலங்கை வரலாற்றின் 12, 13 வது வினாக்களின் இலகுதன்மை 80% விட அதிகரித்துள்ளது. அந்த இரு வினாக்களும் இராசதானி மற்றும் சமய சம்பந்தமான விடயங்களை உள்ளடக்கிய வினாக்களாகும். களப் பயணங்கள், பாடநூலில் படங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளமை, தேசப்படத்தில் இடங்களைக் குறித்துப் பெயரிடுதல் என்பன இலகுதன்மை அதிகரிப்பதில் தாக்கம் செலுத்தியுள்ளன. 12 வது வினாவிற்கு சரியான விடையான (2) வது விடையைத் தெரிவுசெய்ததன் மூலம் 82% யும், 13 ஆம் வினாவிற்கு சரியான விடையான (4) வது விடையைத் தெரிவு செய்ததன் மூலம் 83% யும் அடைந்திருப்பது சிறப்பாக அவதானிக்கக் கூடிய விடயமாகும்.

இலங்கை வரலாற்றில் குறைந்த இலகுதன்மையைக் காட்டுவது 15 வது வினாவாகும். அந்த வினா இலங்கையின் குடியிருப்பு தொடர்பான வினாவாகும். வினாவுக்குக் கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளும் சமமானதாக இருப்பதும், வரலாற்று விடயங்கள் தொடர்பான தெளிவான விளக்கமின்மையும் இதற்குக் காரணமாக இருக்கலாம். சரியான விடையைத் தெரிவு செய்துள்ள மாணவர்கள் 32% மானோராவர். பாடநூலைப் பயன்படுத்துதல், விடயத்துடன் தொடர்புடைய இடங்களை அடையாளமிடுதல் என்பன அடைவு மட்டத்தை உயர்த்துவதற்கான ஆலோசனைகளாகும்.

வினாத்தாள் I இல் உள்ள உலக வரலாறு தொடர்பான 15 வினாக்களில் 50% இலகுதன்மையை அதிகரித்த வினாக்கள் 11 ஆகும். அவற்றில் கூடிய இலகுதன்மையைக் காட்டுவது 29 வது வினாவாகும். 70% மானோர் சரியான விடையைத் தெரிவு செய்துள்ளனர். 30 வது வினா 12% குறைந்த இலகுதன்மையைக் காட்டுகின்றது. இந்த வினாவுக்கு 12% மானோரே சரியான விடையைத் தெரிவு செய்துள்ளனர். வினாத்தாள் முழுவதிலும் மிகவும் குறைந்த இலகுதன்மையைக் காட்டுவது இந்த வினா என்பது குறிப்பிடத்தக்கது. இந்த வினாவில் கேட்கப்பட்டது ரஷ்யாவின் அரசியல் வரலாற்றுடன் தொடர்புடைய நபர்களின் பெயர்களாகும். பாட விடயம் தொடர்பான குறைவான அறிவே இவ்வாறான குறைந்த இலகுதன்மைக்கான காரணமாகும். நபர்களின் பெயர்களுக்குப் பழக்கப்படாமை, பாடநூல்களை அடிக்கடி பயன்படுத்தாமை, இந்தத் தலைப்புக்கள் தரம் 11 இற்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளமை என்பன குறைந்த இலகுதன்மைக்கான காரணமாகும். 30 வது வினாவுக்கு 55% மானோர் (1) வது விடையைத் தெரிவு செய்துள்ளனர். ரஷ்ய வரலாற்றில் முக்கிய நபரான லெனினின் பெயர் அதில் உள்ளடக்கப்பட்டமை இதற்கான காரணமாக இருக்கலாம்.

வினாத்தாள் I இல் உலக வரலாற்றில் 27, 28, 29, 31, 36, 38 ஆகிய வினாக்களுக்கான இலகுதன்மை முறையே 65%, 61%, 70%, 67%, 68%, 61% ஆகும்.

PAST PAPERS WIKI

உலக வரலாற்றில் 27, 28, 29 ஆகிய வினாக்களுக்கான இலகுதன்மை முறையே 65%, 61%, 70% ஆகும். இந்த மூன்று வினாக்களிலும் அண்டை நாடான இந்தியா பற்றிக் கேட்கப்பட்டுள்ளது. உலக வரலாற்றில் கூடிய இலகுதன்மையைக் காட்டுவது 29 வது வினாவாகும். தரம் 6-11 வரையிலான பாடநூல்களில் அசோக மன்னனின் அரசியல் கொள்கை தொடர்பான விடயங்கள் குறிப்பிடப்பட்டிருப்பது இதற்கான காரணமாகும். அவ்வாறே இது தொடர்பாகத் தொடர்பு சாதனங்கள் மூலமும் (தொலைக்காட்சி நாடகம்) அறியக் கூடிய வாய்ப்பு உள்ளமையானது மாணவர்கள் மனதில் விடயங்கள் ஆழமாகப் பதிவதற்குக் காரணமாக உள்ளது.

வினாத்தாள் I இன் இலகுதன்மை 30% யும் விடக் குறைவாகக் காணப்படுவது உலக வரலாற்றில் 30, 33, 34 ஆகிய வினாக்கள் மூன்றுமாகும். அவைகளின் இலகுதன்மை முறையே 12%, 27%, 22% ஆகும். அந்த மூன்று வினாக்களும் ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளின் அரசியல் தொடர்பான நிகழ்வுகள் பற்றிக் கேட்கப்பட்ட வினாக்களாகும். பாட நூலினை வாசித்து விளங்கிக் கொள்ளாமை, நாடுகள் தொடர்பான அரசியல் பண்பாட்டு விபரம், நபர்களின் பெயர்கள், நிகழ்வுகள் தொடர்பாக தர்க்க ரீதியாக விளங்கிக் கொள்ளாமை என்பனவே தவறான துலங்கலின் அதிகரிப்பிற்கான காரணமாகும்.

முதலாம் வினாத்தாள் தொடர்பாகக் கூடிய அடைவு மட்டத்தைப் பெறும் பொருட்டுக் கற்றல் கற்பித்தல் விடயங்களில் குறிப்பிட்ட நபர்களின் படங்கள், தேசப்படங்கள், அட்டவணை, குறிப்பு என்பவற்றைப் பயன்படுத்துதல், குறிப்பிட்ட நிகழ்வுகள் தொடர்பான களப் புத்தகம் தயாரித்தல், சிறு வினாக்கள் தயாரித்தல், அரசர்களின் காலம் அது தொடர்பான நிகழ்வுகளை அட்டவணைப்படுத்தல், வினா-விடைப் போட்டிகள் நடாத்துதல், கற்றலுக்கான நல்ல சூழலை ஏற்படுத்துதல் என்பவற்றின் மூலம் உயர்மட்ட அடைவினைப் பெறலாம்.

தொல்பொருள், மற்றும் வரலாற்றுடன் தொடர்புடைய இடங்களைப் பார்வையிடத் திட்டமிட்டுக் களப் பயணங்களை ஒழுங்கு செய்தல், முன்னோடிக் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தல் என்பவற்றின் மூலமும் அடைவு மட்டத்தை உயர்த்தலாம்.

விடயங்களை நினைவில் வைத்திருப்பதில் பலவீனம், முக்கிய விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்தாமை, வினாக்களுக்கு விடையளிக்கும் நிபுணத்துவம் போதாமை என்பன அடைவு மட்டம் குறைவாகக் காணப்படுவதற்கான காரணமாகும். வினாக்களை சரியாக விளங்கிக் கொள்வதற்கு உதவுதல், எண்ணக்கரு, சொற்களின் கருத்து என்பன பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடல் மூலம் குறைபாடுகளைத் தீர்ப்பதில் மாணவர்களை செயற்படுத்துதல் உயர் அடைவு மட்டத்தை அவர்கள் அணுக வழியேற்படும்.

இலங்கை மற்றும் உலக வரலாற்றின் அரசியல், பொருளாதார, சமூக நிகழ்வுகள் தொடர்பாகக் காலங்களைத் தெளிவாகக் கற்றறிந்து கொள்ள சந்தர்ப்பம் வழங்க வேண்டும். முக்கிய நிகழ்வுகளை எழுதி வகுப்பறையில் காட்சிப்படுத்தல், பாட விடயங்கள், குறு வினா-விடை என்பவற்றை சுவர்ப்பத்திரிகையில் காட்சிப்படுத்தல், சமூகக் கல்வி மன்றங்களில் வினா-விடை நிகழ்வுகள் நடாத்துதல், வரலாறு பாடம் தொடர்பாக மேலும் விளக்கங்களைப் பெற சந்தர்ப்பம் வழங்குதல் ஆகியவற்றின் மூலம் அடைவு மட்டத்தை உயர்த்தலாம்.

PAST PAPERS WIKI

## 2.2 வினாத்தாள் II இற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்கள்

### 2.2.1 வினாத்தாள் II - கட்டமைப்பு

நேரம் 03 மணித்தியாலங்கள். மொத்தப் புள்ளிகள் 120
இது I, II, III என மூன்று பகுதிகளைக் கொண்டது.

**பகுதி I**

முதலாம் வினா மாத்திரம் இப்பகுதிக்குரியது. இது (அ), (ஆ) என்ற இரு பகுதிகளைக் கொண்டது. அவை கட்டாய வினாக்களாகும். "அ" பகுதியில் இலங்கையின் வரலாற்றுப் புகழுடைய இடங்கள் 10 இனைக் குறித்துப் பெயரிடுதலும் உலகப் புறவரிப்படத்தில் வரலாற்றுப் புகழுடைய 8 இடங்களைக் குறித்துப் பெயரிடுதலும் எதிர்பார்க்கப்படுகின்றன. இதற்கு முறையே 10 புள்ளிகளும் 8 புள்ளிகளுமாக 18 புள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. "ஆ" பகுதியில் ஒளிப்படங்கள் தொடர்பானதும் வரலாற்று நிகழ்வுகள் பற்றியதுமான குறு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். இதற்குரிய புள்ளிகள் 12 ஆகும்.

**பகுதி II**

இலங்கை வரலாற்றுடன் தொடர்புடைய கட்டமைப்பு வகை, பகுதிக் கட்டமைப்பு வகையிலான ஐந்து வினாக்களில் மூன்று வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும். வினா ஒன்றிற்குப் 18 புள்ளிகள் வீதம் மொத்தம் 54 புள்ளிகள்.

**பகுதி III**

இந்தியா, ஐரோப்பா, உட்பட தூர கிழக்கு ஆசிய நாடுகளின் வரலாறு தொடர்பான கட்டமைப்பு, பகுதிக் கட்டமைப்பு வகையான நான்கு வினாக்களில் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒரு வினாவுக்கு 18 புள்ளிகள் வீதம் மொத்தம் 36 புள்ளிகள்.

வினாத்தாள் II இற்கான மொத்தப் புள்ளிகள் $= 30 + 54 + 36 = 120$
வினாத்தாள் II இற்கான இறுதிப் புள்ளிகள் $= \frac{120}{2} = 60$

PAST PAPERS WIKI

2.2.2 வினாத்தாள் II - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும், முடிவுகளும், ஆலோசனைகளும் :

| |
|---|
| வினாத்தாள் II இற்கு விடையளித்த தொடர்பான அவதானிப்பு வரைபு 2, 3, 4.1, 4.2, 4.3 என்ற முறையில் முன்வைக்கப்பட்டுள்ளது. வினாவுக்குரிய வரைபு, உரிய வினாக்களின் அவதானிப்பு, முடிவுகள் என்பவற்றுடன் காட்டப்பட்டுள்ளது. |

## பகுதி I

வினா இலக்கம் 1

**1. (அ)** கீழே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வரலாற்று இடங்களையும் தரப்பட்டுள்ள இலங்கைப் படத்திலும் (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வரலாற்று இடங்களையும் தரப்பட்டுள்ள உலகப் படத்திலும் குறித்துப் பெயரிடுக.

(i) யோத வாவி, மஹியங்கனை, கால்க நதி, மிகிந்தலை, பண்டுவஸ்நுவர, பராக்கிரம சமுத்திரம், கசாதோட்டை, இலங்கைத்துறை, யாழ்ப்பாண நகரம், கொடவாயா (10 புள்ளிகள்)

(ii) சிந்து நதி, மலாக்கா நீரிணை, கோவா, ஹிரோஷிமா, ரோம், தாய்வான், தில்லி, கம்போடியா (08 புள்ளிகள்)

**(ஆ)** (i) மேல்வரும் *A, B, C, D* ஆகிய வரலாற்றுத் தகவல்களுடன் தொடர்புடைய நபர்களை/இடங்களை ஒழுங்குமுறையில் உங்கள் விடைத்தாளில் எழுதுக.

*A* - இளவரசன் விஜயன் உள்ளிட்டோர் இந்நாட்டில் கரையிறங்கிய இடம்

*B* - வடமேற்கு இந்தியா மீது படையெடுத்த முதலாவது கிரேக்கப் பேரரசன்

*C* - இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைக்கும்போது பிரித்தானியாவின் பிரதமராக இருந்தவர்

*D* - தொலைபேசியைத் தயாரித்த அமெரிக்கர் (04 புள்ளிகள்)

- *A, B* ஆகிய படங்களை அவதானித்து, கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை **இலக்கங்களின் ஒழுங்கில்** உங்கள் விடைத்தாளில் எழுதுக.

(ii)
1. *A* இனால் காட்டப்பட்டுள்ள நிர்மாணிப்பின் பெயர் என்ன ?
2. இதனை நிர்மாணித்த மன்னனின் பெயரைத் தருக.
3. இலங்கையின் எந்த வரலாற்று நகரத்தில் இது காணப்படுகின்றது ?
4. இதன் சுவர்களின் அரைவட்ட வடிவிலான குடைந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் எதனைக் காணக்கூடியதாய் உள்ளது ? (04 புள்ளிகள்)



*A*

(iii)
1. *B* யினால் காட்டப்படுவது யாது ?
2. அதன் இடது உள்ளங்கையின் மீது எதனைக் காணக்கூடியதாய் உள்ளது ?
3. இவ்வாறான நிர்மாணிப்புகளை எந்த இடங்களுக்கு முன்னால் அதிகமாகக் காணலாம் ?
4. இவ்வாறான நிர்மாணிப்புகளுக்காகப் பெரிதும் பயன்படுத்தப்பட்டுள்ள மூலப்பொருள் யாது ?

(04 புள்ளிகள்)



*B*

PAST PAPERS WIKI

எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்

வினா 1

**(1) (அ) (i)**




PAST PAPERS WIKI

**(10 புள்ளிகள்)**

**(1) (அ) (ii)**




(08 புள்ளிகள்)

PAST PAPERS WIKI

**(ஆ)** **(i)** A - தம்மன்னா / தம்பபண்ணி

B - மகா அலெக்சாண்டர் / அலெக்சாண்டர்

C - கிளமன்ட் ஆர்ட்லி / ஆர்ட்லி

D - அலெக்சாண்டர் கிரகம் பெல் / கிரகம் பெல் **(01 × 04 = 04 புள்ளிகள்)**

**(ii)** 1. - சத்மல் பிரசாதய / ஏழடுக்கு மாளிகை

2. - நிஸங்க மல்ல மன்னன் / நிஸங்க மல்லன்

3. - பொலன்னறுவை / புலஸ்தி நகர்

4. - தேவதை உருவங்கள் / தெய்வ உருவங்கள் **(01 × 04 = 04 புள்ளிகள்)**

**(iii)** 1. - காவற்கல் / வாயிற் காவல் சிலை

2. - பூரண கலசம் / புன்கலசம் / பூரணகும்பம்

3. - சமய வழிபாட்டுத்தலம் / புனிதஸ்தலம்

4. - கருங்கல் / சுண்ணக்கல் **(01 × 04 = 04 புள்ளிகள்)**

**1ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் பற்றிய அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்:**




01 ஆம் வினா கட்டாயமானது. விடையளித்திருப்போர் 100% ஆகும். இதற்கான புள்ளிகள் 30 ஆகும்.

00 - 07 ஆயிடையில் 28%
08 - 15 ஆயிடையில் 43%
16 - 22 ஆயிடையில் 22%
23 - 30 ஆயிடையில் 7%

புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இந்த வினாவுக்கு 23 புள்ளியையோ அதற்கு மேற்பட்ட புள்ளிகளையோ பெற்றவர்கள் 7% ஆவர். 7 புள்ளிகளையோ அதற்குக் குறைந்த புள்ளிகளையோ பெற்றுள்ளோர் 28% ஆவர்.




இவ்வினா 14 உப பிரிவுகளைக் கொண்டுள்ளதுடன், 60% இற்கும் கூடிய இலகுதன்மையைக் காட்டுவது 7 உப பிரிவுகள் மாத்திரமேயாகும். இந்த வினாவில் கூடிய இலகுதன்மையைக் காட்டுவது (ஆ) பிரிவில் (iii) (1) ஆகும். அதன் இலகுதன்மை 79% ஆகும். குறைந்த இலகுதன்மையைக் காட்டுவது (ஆ) (i) (C) பிரிவாகும். அதன் இலகுதன்மை 7% ஆகும்.

PAST PAPERS WIKI

முதலாம் வினாவின் (அ) பகுதியில் *(i)*, *(ii)* முறையே இலங்கைப் படம், உலகப்படம் என்பவற்றில் குறித்துப் பெயரிடுதலாகும். அவற்றின் இலகுதன்மை முறையே 28%, 29% ஆகும். இலங்கையின் வரலாற்று இடங்களைக் குறித்துப் பெயரிடுவதை விட உலகின் வரலாற்று இடங்களைக் குறித்தும் பெயரிடுதல் இலகுவாக உள்ளது.

முதலாம் வினாவின் (ஆ) பிரிவில் *(i) A, B, C, D* முறையே வரலாற்று இடங்கள், நபர்கள் பற்றிக் கேட்கப்பட்ட வினாக்களாகும். அதன் இலகுதன்மை முறையே 74%, 32%, 7%, 77% ஆகும். குறைந்த இலகுதன்மையைக் காட்டுவது *C* பகுதியில் கேட்கப்பட்ட இந்தியா, பிரித்தானியா ஆகிய நாடுகளின் அரசியல் விபரம், நபர்கள் என்பன பற்றிய வினாக்களாகும்.

இப்பிரிவின் *A*, *D* பகுதிகளின் இலகுதன்மை அதிகரித்துக் காணப்படுவதற்கான காரணம் வேறு பாடங்களிலும், வேறு தரங்களிலும் இருந்து பெறப்பட்ட அறிவை நினைவில் வைத்து எழுதியமையாகும்.

(ஆ) பகுதியில் *(ii)*, *(iii)* ஆகிய பகுதிகள் வரலாறு தொடர்பான படங்கள் தொடர்பானவை. முதலாம் வினாவில் கூடிய இலகுதன்மையைக் காட்டுவது (ஆ) *(iii) 1* உப பிரிவாகும். அதன் இலகுதன்மை 79% ஆகும். 'ஆ' பகுதியில் *(ii) 4* வது உபபிரிவிற்குக் குறைந்த இலகுதன்மை காணப்படுகின்றது. அதன் இலகுதன்மை 21% ஆகும். உருவத்தைப் பெயரிட அறிவு இருந்தும், அது அமைந்திருக்கும் வரலாற்று நகரம் தொடர்பான அறிவு குறைவாக இருந்தமை இதற்கான காரணமாகும். இரண்டு படங்களையும் பெயரிடுவது திருப்திகரமாக உள்ளது. A, B உருவங்களைப் பெயரிடுதல் முறையே 61%, 79% உயர் இலகுதன்மையைக் காட்டுகின்றது. இரு உருவங்களில் B உருவத்தின் உபபிரிவுக்கு விடையளித்தல் அனைத்துப் பிரிவிற்கும் 50% ஐ அல்லது அதனை விட உயர்ந்து சென்றுள்ளது. அடிக்கடி காணக்கூடிய இடத்திலிருந்து இப்படம் எடுக்கப்பட்டமை இதற்கான காரணமாக இருக்கலாம். அநேகமான விகாரைகளின் படிக்கட்டுக்களின் இரு மருங்கிலும் இந்த உருவம் காணப்படுகின்றது. *(iii)* 2 உபபிரிவிற்கு விடையளிக்கும்போது இடது உள்ளங்கையை அடையாளம் காண மாணவர்கள் தவறியுள்ளனர். இதனை மாணவர்களுக்கு அறிமுகம் செய்தல் ஆசிரியர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது.

அனைத்துப் பாடங்களின் முடிவிலும், இடையிடையேயும் இடங்களைக் குறித்துப் பெயரிடுதல், குறித்துப் பெயரிட்டுள்ள இடங்களை வகுப்பறையில் காட்சிப் படுத்தல், தேசப்படப் பயிற்சிப் புத்தகம், படங்களையுடைய பயிற்சிப் புத்தகம் என்பவற்றைப் பயன்படுத்துதல் மூலம் இந்த வினாவின் இலகுதன்மையை உயர்த்தலாம்.

1 ஆவது வினாவில் (அ) பகுதியில் *(i)* பகுதியுடன் தொடர்புடைய நபர்கள், இடங்கள் என்பவற்றின் அறிவை வளர்த்துக்கொள்ளும் பொருட்டுப் பாடநூலைப் பயன்படுத்துதல், அரசர்களின் செயற்பாடுகளை எழுதி வைத்தலும் அட்டவணைப்படுத்தலும் அடைவு மட்டத்தை உயர்த்துவதற்கு வழிவகுக்கும்.

(ஆ) பகுதியில் *(ii)*, *(iii)* பிரிவுகளின் இலகுதன்மையை உயர்த்துவதற்குப் பாட நூல், ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி (தரம் 10-11) என்பவற்றில் உள்ள படங்களில் அடிக்கடி அவதானம் செலுத்துதல், படங்களை வகுப்பறையில் காட்சிப்படுத்தல், சுவர்ப்பத்திரிகைகளில் காட்சிப்படுத்துதல், பாடப் பிரவேசத்தில் படமொன்றை அறிமுகப்படுத்தி, அது தொடர்பாக வினாக் கொத்துக்களைத் தயாரித்தல், கல்விச் சுற்றுலாவின்போது வரலாற்று இடங்களை அறிமுகஞ் செய்தல் என்பன பயன்படுத்தப்படலாம்.

PAST PAPERS WIKI

# பகுதி II

**வினா 2**

**தேர்ச்சி :** **அநுராதபுர காலத்தில் நீர்ப்பாசனம், மத்திய நிருவாகம் மற்றும் வீழ்ச்சி தொடர்பான அறிவு விளக்கம் போன்றவற்றை அவதானித்தல்.**

**2.** (i) *A* - கதம்ப நதி
*B* - கோண நதி
*C* - கப்பக்கந்தர நதி

ஆகிய நதிகளின் தற்போதைய பெயர்களை அடைப்புக்குறிக்குள்ளிருந்து தெரிவுசெய்து எழுதுக.
(கலா ஓயா, தெதுறு ஓயா, மல்வத்து ஓயா, யான் ஓயா, மாணிக்க கங்கை, கும்புக்கன் ஓயா)
(03 புள்ளிகள்)

(ii) *A* - வசபன்
*B* - மகாசேனன்
*C* - தாதுசேனன்
*D* - இரண்டாம் அக்போ

ஆகிய ஒவ்வொரு ஆட்சியாளராலும் செய்யப்பட்ட நீர்ப்பாசனத் திட்டம் யாதென அடைப்புக்குறிக்குள்ளிருந்து தெரிவுசெய்து ஒழுங்குமுறையில் எழுதுக.
(அபயவாவி, கந்தளாய்க் குளம், ஹுருலுவாவி, திசாவாவி, மகாவிலச்சிக்குளம், நாச்சதூவ வாவி, பதவியாக்குளம், கலாவாவி) (04 புள்ளிகள்)

(iii) அநுராதபுர இராசதானி வீழ்ச்சியடைய ஏதுவான காரணிகள் **இரண்டை** விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) நீர்வள நாகரிகத்தின் மத்திய நிர்வாகம் ஒழுங்கமைக்கப்பட்ட விதத்தை மேல்வரும் தலைப்புகளின்கீழ் விபரிக்குக.
*A* - அரசனுக்குரிய பொறுப்புகள்
*B* - அரச அதிகாரிகள் (06 புள்ளிகள்)

**2. (i)** *A* - மல்வத்து ஓயா
*B* - கலா ஓயா
*C* - மாணிக்க கங்கை **(01 × 03 = 03புள்ளிகள்)**

**(ii)** *A* - மகா விலாச்சிக்குளம் *B* - ஹுருளு வாவி
*C* - கலா வாவி *D* - கந்தளாய்க் குளம் **(01 × 04 = 04புள்ளிகள்)**

**(iii)**
- ⋆ பலவீனமான அரசர்கள் ஆட்சிப் பீடம் ஏறியமை (ஐந்தாம் மகிந்தன்)
- ⋆ தென் இந்திய ஆக்கிரமிப்புக்கள் (சோழர்) ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லபன் / இராஜ ராஜ சோழன்
- ⋆ கூலிப்படைகள் அரசனுக்கு எதிராக ஆக்கிரமிப்பாளர்களுடன் சேர்ந்து கொண்டமை. (அகம்படி, வேளைக்கார)

**(இரண்டு காரணிகளை விளக்குவதற்கு 02 + 03 = 05புள்ளிகள்)**

**(iv)** *A*
- ⋆ நாட்டு மக்களைப் பாதுகாத்தல் (உள் நாட்டு வெளி நாட்டு எதிரிகளிடமிருந்து)
- ⋆ விவசாயத்திற்குத் தேவையான நீரைப் பெற்றுத் தருதல்
- ⋆ பௌத்த சமயத்தையும் கலாசாரத்தையும் பாதுகாத்தலும் வளர்த்தலும்
- ⋆ பத்து அரச தர்மங்களைக் கவனத்தில் கொண்டு ஆட்சி செய்தல்
- ⋆ நீதியை நிலை நாட்டல்

PAST PAPERS WIKI

*B* ★ பிரதான அரச அதிகாரிகள் சேனாதிபதி - (அரசின் படைத் தலைவன்) புரோகிதன்

பண்டகரிக்க - திறை சேரிக்கு பொறுப்பான அதிகாரி

மகலே - அரசனின் ஆவணங்களுக்கு பொறுப்பான அதிகாரி

(தொழிற்பாடுகளை விளக்குதல் வேண்டும்.)

**(03 + 03 = 06 புள்ளிகள்)**

**2ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் பற்றிய அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்:**




02 ஆம் வினாவைத் தெரிவு செய்தோர் 88% ஆகும். இந்த வினாவுக்கான புள்ளி 18 ஆகும்.

00 - 04 ஆயிடையில் 32%
05 - 09 ஆயிடையில் 32%
10 - 13 ஆயிடையில் 18%
14 - 18 ஆயிடையில் 18%

புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இந்த வினாவுக்கு 14 அல்லது அதற்கு மேலான புள்ளிகளைப் பெற்றோர் 18% ஆவர். 04 அல்லது அதற்குக் குறைந்த புள்ளிகளைப் பெற்றோர் 32% ஆவர்.




★ இந்த வினாவுக்கான உபபிரிவுகள் 10 ஆகும். அவற்றில் இலகுதன்மை கூடிய உபபிரிவு *(i) A* ஆகும். அதன் இலகுதன்மை 67% ஆகும். இலகுதன்மை குறைந்த பிரிவு *(ii) A*, 31% இலகுதன்மையைக் கொண்டுள்ளது.

PAST PAPERS WIKI

அனுராதபுர யுகத்தின் நீர்ப்பாசன செயற்பாடுகள், மத்திய நிருவாகம் அனுராதபுரத்தின் வீழ்ச்சி என்பன தொடர்பாகப் பரீட்சிக்கும் பொருட்டு இந்த வினா கேட்கப்பட்டுள்ளது. இந்த வினாவைத் தெரிவு செய்தோர் வீதம் 88% ஆகும்.

இந்த வினாவின் *(i)* பகுதியில் A, B, C எனும் உபபிரிவு மூன்றும் 55% அல்லது அதற்கு மேலான இலகுதன்மையைக் காட்டுகின்றது. அவை முறையே 67%, 58%, 55% ஆகும். வினாக்களுக்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்வதற்கு வாய்ப்பளிக்கப்பட்டமையும், தரம் 6-11 வரையில் இது தொடர்பான விடயங்களைக் கற்பதற்கு அவகாசம் வழங்கப்பட்டிருப்பதும் இவ்வாறு இலகுதன்மை உயர்வடைந்திருப்பதற்கான காரணமாகும்.

இதில் *(ii)* பகுதியில் A, B, C, D எனும் உபபிரிவுகளில் அரசர்களின் நீர்ப்பாசனத் திட்டம் அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து சரியான விடையைத் தெரிவு செய்ய வேண்டியிருப்பது இப்பகுதியின் இலகுதன்மையின் உயர்விற்குக் காரணமாக உள்ளது. எனினும் A உபபிரிவின் இலகுதன்மை 31% ஆகும். வசப மன்னனின் நீர்ப்பாசனத் திட்டத்தைத் தெரிவுசெய்வது சிக்கலாக உள்ளது. வசப மன்னனின் நீர்ப்பாசனத் திட்டங்கள் பெருந்தொகையாக உள்ளபோதிலும் அது தொடர்பான விளக்கமின்மை இலகுதன்மையின் குறைவிற்குக் காரணமாக அமையலாம். கூடிய இலகுதன்மையான 62% மான C பிரிவு தாதுசேன மன்னனின் நீர்ப்பாசனத் திட்டமாகும். தரம் 6-11 வரையில் பெற்ற அறிவு உயர்மட்ட இலகுதன்மைக்குக் காரணமாக அமையலாம்.

B, D என்பன மகாசேனன், இரண்டாம் அக்போ ஆகிய அரசர்களின் நீர்ப்பாசனப் பணி தொடர்பான அறிவு முறையே 41%, 48% ஆகும். ஏற்கனவே இருந்த அறிவு இதற்கு உதவியிருக்கலாம். *(iii)* பிரிவுக்கு விடயங்களை முன்வைத்து விபரித்தல் எதிர்பார்க்கப்பட்டபோதிலும் விடயங்களை விபரித்தலில் எதிர்பார்க்கப்பட்ட பங்களிப்பு இன்மையால் 42% மான குறைந்த இலகுதன்மை காணப்படுகின்றது.

பகுதி *(iv)* இல் சிறப்பாக விடயங்களைக் கேட்டல் வெளிப்படுத்தப்படுகின்றது. அதில் A பிரிவில் அரசர்களின் செயற்பாடுகளை வரிசைப்படுத்துதல் திருப்திகரமாக இருந்தபோதிலும் B பகுதிக்கு அதிகாரிகளின் செயற்பாடுகள் சரியாக முன்வைக்கப்படாமையால் அடைவு மட்டம் குறைவாகக் காணப்படுகின்றது. A, B ஆகிய பிரிவுகளின் இலகுதன்மை முறையே 54%, 35% ஆகும்.

*(i)*, *(ii)* ஆகிய பிரிவுகள் தொடர்பாக வரிசைப்படுத்துதல், இணைத்தல் போன்ற முன்னோடி வினாக்களுக்கு விடையளித்தல் என்பவற்றை அதிகரிப்பதன் மூலம் இலகுதன்மையை உயர்த்தக்கூடியதாக இருக்கும். *(iii)*, *(iv)* பிரிவுகளின் பொருட்டு முன்னோடிப் பரீட்சைகளை நடாத்துதல், முன்னோடி வினாக்களுக்கு விடை எழுதுவித்தல் என்பவற்றின் மூலம் உயர் அடைவினைப் பெற முடியும்.

PAST PAPERS WIKI

**வினா 3**

**தேர்ச்சி :** **புராதன இலங்கையின் வர்த்தகத் தொடர்புகள் மற்றும் பௌத்த சமயம் மூலம் கலைகள் வளர்ச்சியடைந்த முறை பற்றி விமர்சன ரீதியான தெளிவைப் பெறும் திறமையை அவதானித்தல்.**

**3.** (i) அனுராதபுர, பொலன்னறுவைக் காலங்களில் இலங்கையுடன் வர்த்தகத் தொடர்புகளைப் பேணிய **மூன்று** நாடுகளைப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

(ii) கடந்த காலங்களில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட வர்த்தகப் பண்டங்கள் **இரண்டையும்** இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட வர்த்தகப் பண்டங்கள் **இரண்டையும்** வெவ்வேறாக எழுதுக. (04 புள்ளிகள்)

(iii) வெளிநாட்டுத் தொடர்புகள் விருத்தியடைவதிற் செல்வாக்குச் செலுத்திய இலங்கையின் அமைவிடத்துக்குரிய முக்கிய அம்சங்கள் **இரண்டை** விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) பௌத்த சமயத்தால் இந்நாட்டில்

*A* - கட்டடக்கலை

*B* - சிற்பக்கலை, செதுக்குக்கலை

என்பன வளர்க்கப்பட்ட விதத்தை உதாரணங்களுடன் எடுத்துக்காட்டுக. (06 புள்ளிகள்)

**3. (i)** இந்தியா, அரேபியா, பாரசீகம், கிரேக்கம், உரோம், சீனா, பர்மா

**(01 × 03 = 03 புள்ளிகள்)**

**(ii)**
- **இறக்குமதிப் பொருட்கள்** - தங்கம், வெள்ளி, பவளம், கண்ணாடிப் பொருட்கள், பீங்கான் பொருட்கள், குதிரை, பட்டு, செப்பு, வெண்கலம்.
- **ஏற்றுமதிப் பொருட்கள்** - யானை, யானைத்தந்தம், முத்து, இரத்தினக்கற்கள், ஆமைஓடுகள், சங்கு, பருத்தித் துணி.

**(01 × 04 = 04 புள்ளிகள்)**

**(iii)**
- ⋆ இந்து சமுத்திரத்தின் மத்தியில் கேந்திர நிலையமாக அமைந்துள்ளமை.
- ⋆ கிழக்கு, மேற்கு வர்த்தகப்பாதையின் மத்தியில் அமைந்துள்ளமை
- ⋆ பருவக்காற்றுக்களுக்கும் நீரோட்டங்களுக்கும் ஏற்ப அமைந்துள்ளமை
- ⋆ இயற்கைத் துறைமுகம் காணப்பட்டமை (திருகோணமலை)
- ⋆ இந்தியாவுக்கு மிக அருகில் ஆனால் இந்தியாவிலிருந்து பிரிந்து அமைந்திருத்தல்
- ⋆ பட்டுப் பாதையின் மத்தியில் அமைந்துள்ளமை.

**( இரண்டை விளக்குவதற்கு 02 + 03 = 05 புள்ளிகள்)**

(iv) *A* ★ **கட்டடக்கலை**

தூபிகள், போதிகர

தூபிமனைகள் - வட்டதாது மனை, மெதிரிகிரிய தூபாராம, தியொய

சிலைமனைகள்

ஆராமைகள்

போயாமனைகள்

*B* ★ **சிற்பக்கலையும் செதுக்கல் கலையும்**

- சமயக் கட்டடங்களில் காணப்படும் செதுக்கல்கள்
- சந்திர வட்டக்கல், காவற்கல், வாகல்கட செதுக்கல்கள், கொரவக்கல்
- புத்தர் சிலைகள் (நிற்கும், சமாதி, சயனச் சிலைகள்) மாளிகாவில, அவுக்கண பொலன்னறுவை
- போதி சத்துவர் சிலை (அவலோகேஸ்வர) தம்பேகொட, குஷ்டராஜகல

**(உதாரணங்களுடன் விளக்க 03 + 03 = 06 புள்ளிகள்)**

**3ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் பற்றிய அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்:**




03 ஆம் வினாவை 78% மாணோர் தெரிவு செய்துள்ளனர். இந்த வினாவுக்கான புள்ளி 18 ஆகும்.

00 - 04 ஆயிடையில் 24%
05 - 09 ஆயிடையில் 31%
10 - 13 ஆயிடையில் 23%
14 - 18 ஆயிடையில் 22%

புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இந்த வினாவுக்கு 14 புள்ளிகள் அல்லது அதற்கு மேலான புள்ளிகளைப் பெற்றுள்ளோர் 22% ஆகும். 24% வீதத்தினர் பெற்ற புள்ளிகள் 04 அல்லது அதற்குக் குறைவானதாகும்.




இந்த வினாவின் பகுதிகள், உபபகுதிகள் 05 இல் இலகுதன்மை கூடுதலாகக் காணப்படுவது (i) இல் ஆகும். அது 61% ஆகும். குறைந்த இலகுதன்மை பகுதி (ii) ஆக இருப்பதுடன் அது 48% ஆகும்.

PAST PAPERS WIKI

இலங்கையின் பண்டைய வர்த்தகத் தொடர்பு மற்றும் புத்த சமயத்தின் கலைகள் வளர்ச்சியுற்றமை என்பன தொடர்பாக விமர்சிக்கக் கூடிய திறமையைப் பரீட்சித்தல் இந்த வினாவில் எதிர்பார்க்கப்பட்டது. அனுராதபுர, பொலன்னறுவைக் காலத்தில் நடைபெற்ற உள்நாட்டு வர்த்தகம், வர்த்தகத் தொடர்பு கொண்ட வெளிநாடுகள், வர்த்தகப் பொருட்கள், வர்த்தக மத்திய நிலைமையாக இலங்கையின் அமைவிட முக்கியத்துவம் என்பன *(i), (ii), (iii)* பகுதியிலும், *(iv)* வது பகுதியில் பௌத்த சமயத்தினால் இலங்கையின் சிற்பக் கலைகள் வளர்ச்சியடைந்த விதமும் விமர்சன ரீதியாகக் கேட்கப்பட்டுள்ளது.

பகுதி *(i)* கூடுதலான இலகுதன்மையுடையதாகக் காணப்படுவதுடன் அது 61% ஆகும். பகுதி *(ii)* குறைந்த இலகுதன்மையுடையதாகக் காணப்படுகின்றது. அது 48% ஆகும். வர்த்தகப் பொருட்கள் தொடர்பாக தெளிவு இருந்தபோதிலும் ஏற்றுமதி, இறக்குமதிப் பொருட்களை வேறுபடுத்திக் கொள்வதில் தவறியமை குறைவான இலகுதன்மைக்கான காரணமாகும்.

இவ்வினாவின் *(iii)* வது பகுதி புவியியல் பாடத்திலிருந்து தகவல்களைப் பெற்று விடை எழுதக்கூடிய பகுதியாகும். இதன் இலகுதன்மை 56% ஆகும். இலங்கையின் அமைவிடம் தொடர்பாக சரியான விளக்கமின்மை குறைந்த இலகுதன்மைக்கான காரணமாகும்.

இந்த வினாவின் *(iv)* பகுதியில் பௌத்த மதம் காரணமாக A - கட்டிடக் கலை B - செதுக்கல் மற்றும் சிற்பக்கலை வளர்க்கப்பட்டதைக் காட்டும்போது விடைகளுக்குரிய விடயங்களை முன்வைக்கும் ஆற்றல் இருந்த போதிலும் உதாரணங்களுடன் விடயங்களை நிரூபிக்கும் திறமை இன்மை குறைவான இலகுதன்மையில் தாக்கம் செலுத்தியுள்ளது. இப்பகுதியின் இலகுதன்மை 51% ஆகும். *(iv)* வது பகுதியில் A, B எனும் உபபிரிவுகளில் B யின் உபபிரிவில் செதுக்கல், சிற்பக்கலை எனும் இரு வகையில் தகவல்களை உதாரணங்களுடன் முன்வைக்க முடியாமை உயர் அடைவு மட்டத்தினை அடைய முடியாமைக்கான மற்றுமொரு காரணமாகும்.

இந்த அலகினைக் கற்பிக்குபோது இலங்கை, வர்த்தகத் தொடர்பு கொண்ட மேற்குக் கிழக்கு நாடுகளை உலகப் படத்தின் மூலம் விளங்க வைத்தல், வகுப்பறையில் தேசப் படங்களுடன் கூடிய விபரங்களைக் காட்சிப்படுத்துதல், ஏற்றுமதி, இறக்குமதிப் பொருட்கள், நாடுகள் என்பவற்றை அட்டவணைப்படுத்துதல், இலங்கையின் அமைவிடத்தின் முக்கியத்துவம் தொடர்பான விடயங்களைத் தேசப்படத்தின் மூலம் விளக்கிக் காட்டுதல், பாடநூலில் உள்ளடக்கப்பட்டுள்ள கட்டிடக் கலையுடன் தொடர்புடைய உப அங்கங்கள், செதுக்கல், சிற்பம் தொடர்பான உருவங்களைக் காண்பித்து கலந்துரையாடல், கல்விச் சுற்றுலாவின்போது இவை தொடர்பாகக் கூடிய அவதானம் செலுத்துதல் என்பன உயர்மட்ட அடைவினைப் பெறுவதற்கு வழியாக அமையும்.

PAST PAPERS WIKI

வினா 4

**தேர்ச்சி : இலங்கையின் பௌதிகச் சூழலுக்கும் வரலாற்றுக்கும் இடையிலான இடைத் தொடர்பு பற்றிய அறிவையும், கோட்டைக்காலம் வரையிலான வரலாற்று நிகழ்வுகளைப் பற்றிய அறிவையும் அவதானித்தல்.**

**4.** (i) மேல்வரும் பிரதேசங்கள் எந்த வரலாற்றுப் பெயர்களால் அழைக்கப்பட்டனவென அடைப்புக்குறிக்குள்ளிருந்து தெரிவுசெய்து எழுதுக. (03 புள்ளிகள்)

*A* - யாழ் குடாநாடு

*B* - கிட்டத்தட்ட தற்போதைய வடமத்திய மாகாணத்துக்குரிய பிரதேசம்

*C* - மத்திய மலைநாடு

(சப்ரகமுவ, மலையரட்டை, தமன்கடுவ, பிஹிட்டி ரட்ட, நகதிவ, திகாமடுல்ல)

(ii) மேல்வரும் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களின் பெயர்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவுசெய்து எழுதுக.

*A* - முதலாவதாகச் சங்காராமம் ஒன்றை தனியாருக்கு வழங்கியவன்

*B* - புனித தந்ததாது இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட காலப்பகுதியில் அனுராதபுரத்தில் ஆட்சிசெய்தவன்

*C* - அதிகளவிலான கல்வெட்டுகளை நிறுவி துலாபாரக் கொடை வழங்கல் தொடர்பாகப் பிரபல்யமானவன்

*D* - சங்கமு விகாரைக் கல்வெட்டுக்கமைய முதலாம் பராக்கிரமபாகுவுடன் உடன்படிக்கை செய்தவன்

(வோகாரிக திஸ்ஸ, இரண்டாம் கஜபாகு, சிரிசங்கபோதி, கீர்த்தி ஸ்ரீ நிசங்கமல்லன், சகஸ்ஸமல்லன், வலகம்பா, கித்சிரிமெவன், மானாபரணன்) (04 புள்ளிகள்)

(iii) பொலன்னறுவைக் காலத்துக்குப் பின்னர் நிர்வாகத் தலைமையகங்களைத் தெரிவுசெய்வதில் ஆட்சியாளர்களினால் கவனம் செலுத்தப்பட்ட **இரண்டு** விடயங்களை விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) ஆறாம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக்காலம் அரசியல், கலாசாரரீதியில் முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்களை உதாரணங்களுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

**4. (i)** *A* - நவதிவ / நகதிவ

*B* - பிஹிட்டி ரட்டை

*C* - மலையரட்டை **(01 × 03 = 03 புள்ளிகள்)**

**(ii)** *A* - வலகம்பா

*B* - கித் சிரிமெவன்

*C* - கீர்த்தி ஸ்ரீ நிசங்கமல்லன்

*D* - இரண்டாம் கஜபாகு **(01 × 04 = 04 புள்ளிகள்)**

**(iii)**
- ⋆ பாதுகாப்பு
- ⋆ இலகுவாக விவசாயம் செய்யக் கூடிய வசதி
- ⋆ வர்த்தக நடவடிக்கைகள் சாதகமாக இருத்தல் (வாசனைத் திரவியம்)
  பாக்கு, கறுவா, வாசனைப் பொருட்கள்

**(இரண்டு விடையங்களை விளக்குவதற்கு 02 + 03 = 05 புள்ளிகள்)**

**(iv)** ● **அரசியல்**
- ⋆ யாழ்ப்பாண இராச்சியம், வன்னிப் பிரதேசம் என்பவற்றை இணைத்துக் கொண்டமை - சப்புமல் குமாரன்
- ⋆ மலையரட்டையில் ஏற்பட்ட கிளர்ச்சியை அடக்கியமை - அம்புலுகல
- ⋆ வன்னிப் பிரதேசம் சுயமாக எழுந்து நிற்பதற்கு உதவிய தலைவர்களை அடக்கியமை
- ⋆ இறுதியாக நாட்டை ஒரே குடையின் கீழ் ஆட்சி செய்தமை
- ⋆ விஜய நகரப் பேரரசின் துறைமுகம் ஒன்றை ஆக்கிரமித்தமை - அதிவீரராம பட்டணம்

PAST PAPERS WIKI

- **கலாச்சாரம்**
  - ★ கல்வித்துறையில் ஏற்பட்ட விருத்தி (பிரிவெனாக்களும் பிரிவெனாக் கல்வியும்)
    உ+ ம் - பபிலியான சுனேத்ரா தேவி பிரிவெனா
  - ★ சிங்கள தூதுவிடுகாவியங்களின் விருத்தி
    உ+ ம் - சலலிஹினி, கிரா, ஹங்ஸ போன்ற தூதுவிடு காவியங்கள்
  - ★ சிரேஷ்ட கல்வியியலாளர்களின் தோற்றம்
    உ+ ம் - தொடகமுமே ஸ்ரீ ராகுல, வத்தாவே, விதாகம மைத்திரி
  - ★ விகாரைகள் நிர்மாணித்தமை, அனுசரணை வழங்கியமை
  - ★ இந்துக் கோவில்கள் நிர்மாணம் அனுசரணை

**(உதாரணங்களுடன் விளக்குவதற்கு 03 + 03 = 06 புள்ளிகள்)**

**4ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் பற்றிய அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்:**




48% மாணோர் 4 வினாவைத் தெரிவு செய்துள்ளனர். இதற்கான புள்ளிகள் 18 ஆகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 00 | - | 04 | ஆயிடையில் | 49% |
| 05 | - | 09 | ஆயிடையில் | 26% |
| 10 | - | 13 | ஆயிடையில் | 13% |
| 14 | - | 18 | ஆயிடையில் | 12% |

புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இந்த வினாவுக்கு 14% அல்லது அதற்குக் கூடிய புள்ளிகளைப் பெற்றோர் 12% ஆவர். 04 அல்லது அதற்குக் குறைந்த புள்ளிகளைப் பெற்றுள்ளோர் 49% ஆவர்.




இந்த வினா 9 உபபிரிவுகளைக் கொண்டுள்ளது. (ii) *A*, *C* எனும் பகுதிகள் 60% ஐக் கொண்டு கூடிய இலகுதன்மையைக் காட்டுகின்றது. (i) *B* பிரிவு குறைந்த இலகுதன்மையைக் கொண்டுள்ளது. அதன் இலகுதன்மை 18% ஆகும்.

PAST PAPERS WIKI

இலங்கையின் பௌதீகச் சூழலுக்கும் அரசியல் வரலாற்றுக்கும் இடையிலான தொடர்புகள் பற்றிய அறிவையும், அநுராதபுர யுகம் முதற்கொண்டு கோட்டை யுகம் வரையிலான வரலாற்று நிகழ்வுகள் தொடர்பான அறிவினையும் பரீட்சிக்கும் பொருட்டே இந்த வினா தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த வினாவில் ஆகக் கூடிய இலகுதன்மை பகுதி (ii) இல் A, C எனும் உபபிரிவுகளில் காணப்படுவதோடு அதன் இலகுதன்மை 60% ஆகும். பகுதி (i) இல் B குறைந்த இலகுதன்மையுடையதாகக் காணப்படுவதோடு அதன் இலகுதன்மை 18% ஆகும்.

பகுதி (i) இல் இலங்கையின் வரலாற்றுப் பிரதேசங்கள் எப்பெயரால் அழைக்கப்பட்டன என்பது தொடர்பான அறிவைப் பரிசீலிப்பதாகும். வினாவுக்குப் பொருத்தமான விடைகள் அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளன. எனினும் அதன் மொத்த இலகுதன்மை 34.7% ஆகும். இலங்கையின் வரலாற்றுப் பிரதேசங்களை அறிந்துகொள்வதில் வரலாற்று விபரங்கள் தொடர்பான தெளிவான அறிவின்மை இதற்குக் காரணமாகும்.

பகுதி (ii) இற்குப் பொருத்தமான விடைகள் அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளன. இலங்கையின் அரசர்கள், அந்தக் காலத்தில் நிகழ்ந்த நிகழ்வுகள் என்பவற்றை சரியாக இணைப்பது இதில் எதிர்பார்க்கப்பட்டது. இதற்கான இலகுதன்மை 52.75% ஆக இருப்பதோடு, A - முதலாவது ஆராமையைத் தானமாக வழங்கியமை C - துலாபாரக்கொடை என்பன தொடர்பான அரசர்கள் வரலாற்றில் பிரசித்தி பெற்றவர்களாக இருப்பதும், ஏனைய தரங்களில் இது தொடர்பான அறிவைப் பெற்றுள்ளமையும் 60% மான கூடிய இலகுதன்மையைப் பெறுவதற்கான காரணங்களாகும்.

(iii) ஆம் பகுதிக்கான இலகுதன்மை 34% ஆகும். பாட விடயங்களை முன் வைத்தல் விளக்குதல் என்பன தொடர்பாகப் புள்ளிகள் வெவ்வேறாக வழங்கப்படுகின்றது. விடயங்களை முன்வைத்தாலும், அதனை முன்வைக்கும் திறன் குறைந்த தரத்தில் உள்ளதால் இலகுதன்மை குறைந்திருக்கலாம்.

பல நிர்வாக மத்திய நிலையங்களையுடைய ஆட்சியாளர்களைக் கொண்ட வரலாற்று விபரம் கேட்கப்பட்டுள்ளதால் முன்வைப்பதில் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

(iv) இன் இலகுதன்மை 26% ஆகும். ஆறாம் பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக் காலம் தொடர்பான அரசியல், பண்பாட்டுத் தொடர்புகளை வேறுபடுத்திப் பகுப்பாய்வு செய்யும் திறமையின்மை, பராக்கிரமபாகு என்ற பெயரில் பல அரசர்கள் இருந்ததால் சரியான ஆட்சிக்காலத்தைப் பிரித்து அறிந்துகொள்ளாமை என்பன குறைவான இலகுதன்மைக்கான காரணமாகலாம்.

இராசதானி, ஆட்சியாளர்கள், அக்காலத்தில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகள் என்பவற்றை நிரல்படுத்துதல், அவற்றை வகுப்பறையில் காட்சிப்படுத்தல் என்பவற்றின் மூலம் இலகுதன்மையின் மட்டத்தை அதிகரிக்கலாம்.

PAST PAPERS WIKI

**வினா 5**

**தேர்ச்சி :** **கோட்டை காலம் முதல் பிரித்தானியர் ஆட்சிக் காலம் வரையில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார சமூக நிகழ்வுகள் தொடர்பான விளக்கத்தை அவதானித்தல்.**

**5.** (i) விஜயபா கொள்ளயவின் பின்னர் ஏற்பட்ட

*A* - கோட்டே

*B* - சீதாவாக்கை

*C* - ரைகம

போன்ற இராச்சியங்களின் ஆரம்பகால ஆட்சியாளர்கள் **மூவரைப்** பெயரிடுக. (03 புள்ளிகள்)

(ii) மேல்வரும் *A, B, C, D* ஆகியவற்றினால் காட்டப்பட்டுள்ள வரலாற்றுச் சம்பவங்களுடன் தொடர்புடைய நபர்களை அடைப்புக்குறிக்குள்ளிருந்து தெரிவுசெய்து, ஒழுங்குமுறையில் எழுதுக.

*A* - போர்த்துக்கேயரின் கைப்பொம்மையாக இருந்த கோட்டே ராச்சியத்தின் ஆட்சியாளன்

*B* - முதல் தடவையாக போர்த்துக்கேயருக்கு எதிராக கடுமையான நடைமுறையைப் பின்பற்றிய யாழ்பாண ஆட்சியாளன்

*C* - 'கீவ் ஆணைப்படி' இலங்கையின் கரையோர மாகாணங்களை ஆங்கிலேயருக்குக் கையளிக்க விரும்பாத ஒல்லாந்து தேசாதிபதி

*D* - கி.பி. 1815 உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட பிரித்தானிய தேசாதிபதி

(ஜோன் டொய்லி, ரொபர்ட் பிரவுண்றிக், தொன் ஜுவன் தர்மபால, வீதிய பண்டார, சங்கிலியன், பரராஜசேகரன், பன் எங்கள்பேர்க், ரைக்லோவ்.்.பா வன் ஹுன்ஸ்) (04 புள்ளிகள்)

(iii) கி.பி. 1818 இல் மலைநாட்டுப் பிரதேசங்களில் ஆரம்பித்த பிரித்தானியருக்கு எதிரான சுதந்திரப் போராட்டம் தோல்வியடைவதற்கு ஏதுவான **இரண்டு** காரணங்களை விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை விருத்தி காரணமாக இலங்கையின் சமூக பொருளாதாரத் துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு **ஒவ்வோர்** உதாரணங்களைத் தந்து, விபரிக்குக. (06 புள்ளிகள்)

**5. (i)** *A* - 7 ஆம் புவனேகபாகு

*B* - மாயாதுன்னை

*C* - றைகம் பண்டார (மத்தும பண்டார) **(01 × 03 = 03 புள்ளிகள்)**

**(ii)** *A* - டொன் யுவான் தர்மபாலன்

*B* - சங்கிலி

*C* - பன் எங்கல் பேர்க்

*D* - றொபர்ட் பிரவுண்றிக் **(01 × 04 = 04 புள்ளிகள்)**

**(iii)**
- ★ திட்டமிட்ட முறையில் ஒழுங்கமைக்கப்படாமை
- ★ கண்டிப் பிரதானிகள் தேசிய உணர்வுடன் செயற்படாமை
- ★ சில பிரதானிகள் பிரித்தானியர் பக்கம் சேர்ந்து கொண்டமை (மொல்லிகொட)
- ★ ஆங்கிலேயர் மேற்கொண்ட அடக்கு முறைகள் (மக்கள், சொத்துக்களை அழித்தமை)
- ★ துரைசாமி அரசின் உரிமையாளர் அல்ல என்பது வெளிவந்தமை
- ★ பிரித்தானியரின் படைப்பலம்

**(இரண்டு விடயங்களை விளக்குவதற்கு 02 + 03 = 05 புள்ளிகள்)**

**(iv)** ● பொருளாதாரம்
- ★ தன்னிறைவுப் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தமை
- ★ ஏற்றுமதி - இறக்குமதிப் பொருளாதாரம் ஆரம்பிக்கப்பட்டமை
- ★ பணமும் வங்கி நடவடிக்கைகளும் விருத்தியடைதல்
- ★ புதிய தொழில்கள் உருவாதல்
- ★ உட்கட்டமைப்பு வசதிகள் பெருகியமை

PAST PAPERS WIKI

- கலாச்சாரம்
    - ★ தேசிய கலாச்சாரம் வீழ்ச்சியடையத் தொடங்கியமை
    - ★ மத்திய தர வகுப்பினர் தோற்றம் பெற்றமை
    - ★ இந்தியத் தொழிலாளர்களின் வருகை
    - ★ முதலாளி தொழிலாளி பேதம் ஏற்படல்

**(இரு துறைகளினதும் ஒரு வேறுபாடு வீதம் விவரிப்பதற்கு 03 + 03 = 06 புள்ளிகள்)**

**5ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் பற்றிய அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்:**




05 ஆம் வினாவை 59% த்தினர் தெரிவு செய்திருந்தனர். இவ்வினாவிற்கான புள்ளிகள் 18 ஆகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 00 | - | 04 | ஆயிடையில் | 21% |
| 05 | - | 09 | ஆயிடையில் | 30% |
| 10 | - | 13 | ஆயிடையில் | 24% |
| 14 | - | 18 | ஆயிடையில் | 25% |

புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இந்த வினாவுக்கு 14 புள்ளிகள் அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றோர் 25% ஆகும். 21% த்தினர் 04 அல்லது அதற்கும் குறைந்த புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இந்த வினாவுக்குரிய உபபிரிவுகள் 9 இல் அதிக இலகுதன்மையாக (i) *C* உபபிரிவு இருப்பதுடன் அது 84% ஆகும். இலகுதன்மை குறைந்தது (ii) *B* ஆக இருப்பதுடன் அதன் இலகுதன்மை 39% ஆகும்.

PAST PAPERS WIKI

கோட்டை யுகம் முதற்கொண்டு பிரித்தானியரது ஆட்சி வரை நிலவிய அரசியல், பொருளாதார, சமூக நிகழ்வுகள் தொடர்பான தெளிவான அறிவைப் பரீட்சிக்கும் பொருட்டு இந்த வினா கேட்கப்பட்டுள்ளது.

*(i)* பகுதிக்கு விடையளித்துள்ளோர் 70.67% ஆகும். கோட்டை இராசதானி பிரிந்தது தொடர்பான வரலாற்று நிகழ்வு (விஜயபாகு கொலை) பற்றிய அறிவு பரீட்சிக்கப்பட்டுள்ளது.

இந்த வரலாற்று நிகழ்வு மாணவரிடையே பரிச்சயமாக இருப்பதானது இலகுதன்மையின் உயர்வுக்குக் காரணமாகும்.

இதில் *(ii)* பகுதியின் A உபபிரிவிலும் கோட்டை இராசதானி தொடர்பான வரலாற்று நிகழ்வுகள், நபர்கள் தொடர்பான அறிவு பரீட்சிக்கப்பட்டுள்ளது. வினாவுக்குப் பொருத்தமான விடைகள் அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்ட பெயர்களிலிருந்து தெரிவு செய்யக்கூடியதாக இருந்தமை இப்பிரிவின் இலகுதன்மை உயர்மட்டத்திலிருப்பதற்கான காரணமாகும். இப்பிரிவின் மொத்த இலகுதன்மை 66.25% ஆகும். அப்பிரிவில் கூடுதலான இலகுதன்மை *(ii)* D பிரிவில் காணப்படுகின்றது. அது 80% ஆகும்.

பகுதி *(iii)* இல் கி.பி. 1818 ஆம் ஆண்டு பிரித்தானியருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சுதந்திரக் கிளர்ச்சி பற்றிக் கேட்கப்பட்டுள்ளது. இலங்கையில் ஆண்டு தோறும் தேசிய வீரர் நினைவு தினத்தில் இது தொடர்பான தகவல்களைப் பத்திரிகை மூலமும் அறிஞர்கள் மூலமும் பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது. மேலும் திரைப்படம், தொலைக்காட்சி நாடகம் என்பவற்றின் மூலமும் இவை தொடர்பாக அறியக் கூடியதாக உள்ளது. வினா எளிதாவதற்கு இவை காரணங்களாகும். இவை தவிர வழிபாட்டுத்தலங்களில் சுவரோவியங்கள் மூலமும் தகவல்களைச் சேகரித்து அறிவை வளர்த்திட சந்தர்ப்பங்கள் இருப்பதால் 53% உயர் இலகுதன்மையைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது.

பகுதி *(iv)* இன் இலகுதன்மை 43% ஆகும். இந்த வினாவில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை விருத்தி காரணமாக இலங்கையின் பொருளாதார, சமூகத் துறையில் ஏற்பட்ட மாற்றங்களை உதாரணங்களுடன் முன்வைக்கும்படிக் கேட்கப்பட்டுள்ளது. விபரிக்கும் திறமை இருந்தபோதிலும், மாற்றம் தொடர்பாக உதாரணங்களை முன்வைக்கும் திறமை இன்மையால் இந்த வினாவுக்கான இலகுதன்மை குறைவாகக் காணப்படுகின்றது.

இங்கு *(i), (ii)* பிரிவுகளுக்கான பொருத்தமான காலம், நபர்கள், நிகழ்வுகள், ஆட்சிக்காலம் என்பன பற்றி அட்டவணை தயாரித்தல், வரைதல், முன்னோடி வினாக்களுக்கு விடையளித்தல் போன்ற பயிற்சிகளில் அடிக்கடி ஈடுபடுதல் சிறந்தது.

*(iii), (iv)* பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைத் தெளிவாக முன்வைத்தல், உதாணங்கள் கொண்ட பயிற்சிகளைச் செய்வித்தல் பொருத்தமானதாகும். அவ்வாறே *(iv)* பிரிவுக்குப் பொருத்தமான ஒவ்வொரு துறைகளையும் பிரித்து அடையாளங் காணும் திறமையை வளர்த்தல், அவற்றின் வித்தியாசம் தொடர்பான விடயங்களை முன்வைப்பதற்கு அவகாசத்தைப் பெற்றுக் கொடுக்கும் பயிற்சிகளைச் செய்வித்தல் என்பனவும் முக்கியமானதாகும். வினாவொன்றில் காணப்படும் உபபிரிவுகளை அடையாளங்கண்டு பிரித்துக்கொள்ள

PAST PAPERS WIKI

**வினா 6**

**தேர்ச்சி :** **பிரித்தானியர் காலத்தில் ஏற்பட்ட அரசியல், கலாசார மாற்றம் பற்றிய அறிவையும் சுதந்திரத்தின் பின் நாட்டில் ஏற்பட்ட கல்வி அபிவிருத்தி பற்றிய தர்க்க ரீதியான விமர்சிக்கக்கூடிய திறமையையும் அவதானித்தல்.**

**6.** (i) மேல்வரும் விடயங்கள் எந்த அரசியல்யாப்புச் சீர்திருத்தத்துக்கமைய நடைமுறைப்படுத்தப்பட்டனவெனக் குறிப்பிடுக.

*A* - பழமையான கிராமசபையின் அதிகாரங்களை நீதிமன்றங்களுக்குக் கையளித்தல்

*B* - நிர்வாகக்குழு ஆட்சிமுறை ஆரம்பிக்கப்பட்டமை

*C* - மேற்சபை (செனட் சபை) உருவாக்கப்பட்டமை (03 புள்ளிகள்)

(ii) மேல்வரும் *A*, *B*, *C*, *D* ஆகியவற்றினால் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களுடன் தொடர்புடையவர்களைக் குறிப்பிடுக.

*A* - லங்கா சமசமாஜக் கட்சியின் ஆரம்பகாலத் தலைவர்

*B* - சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமர்

*C* - இலவசக் கல்வியின் தந்தை

*D* - இலங்கையின் முதலாவது நிறைவேற்றதிகார ஜனாதிபதி (04 புள்ளிகள்)

(iii) சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் கல்வி அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் **இரண்டை** விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) மேல்வருவோருள் **இருவரைத்** தெரிவுசெய்து, அவர்கள் சமய, கலாசார மறுமலர்ச்சிக்கு ஆற்றிய பணிகளை விபரிக்குக.

*A* - அனகாரிக தர்மபால

*B* - வண. ஹிக்கடுவே ஸ்ரீ சுமங்கள தேரர்

*C* - சேர். பொன்னம்பலம் இராமநாதன்

*D* - ஆறுமுகநாவலர்

*E* - எம். சி. சித்தி லெப்பை

*F* - ரி. பி. ஜாயா (06 புள்ளிகள்)

**6. (i)** *A* - கோல்புறுக் கமரன் (1833 ஆம் ஆண்டின் அரசியலமைப்பு சீர்திருத்தம்)

*B* - டொனமூர் (1931 ஆம் ஆண்டின் அரசியலமைப்பு சீர்திருத்தம்)

*C* - சோல்பரி (1947 ஆம் ஆண்டின் அரசியலமைப்பு சீர்திருத்தம்)

**(01 × 03 = 03 புள்ளிகள்)**

**(ii)** *A* - கலாநிதி என்.எம். பெரேரா / N.M. பெரேரா

*B* - டி.எஸ் சேனா நாயக்கா / தேசபிதா D.S. சேனாநாயக்கா

*C* - கலாநிதி சீ.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கரா / C.W.W. கன்னங்கரா

*D* - திரு. ஜே.ஆர். ஜெயவர்த்தன

**(01 × 04 = 04 புள்ளிகள்)**

**(iii)**
- ★ சுயமொழியில் கல்வியை வழங்கல்
- ★ இலவச மதிய உணவை மீண்டும் வழங்கல்
- ★ புலமைப் பரிசிலை முறையாக வழங்கல்
- ★ விஞ்ஞான கூட வசதிகளை வழங்கல்
- ★ பல்கலைக்கழக வசதிகளை மேம்படுத்தல்
- ★ அரச உதவிபெறும் பாடசாலைகள், ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைகள் அரச மயமாக்கப்பட்டமை
- ★ கல்வி நிர்வாகத்தை ஒழுங்கமைத்தல்
- ★ இலவச பாடநூல், இலவச சீருடை வழங்கப்படல்

PAST PAPERS WIKI

**(இரண்டு செயல்களை விளக்க 02 + 03 = 05 புள்ளிகள்)**

**(iv)** *A* • **அநகாரிக தர்மபால அவர்கள்**

- சிங்கள பௌத்தர்களுக்கிடையில் தேசிய உணர்வை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்தமை
- மகாபோதி சங்கத்தை ஆரம்பித்தல்
- பௌத்த பாடசாலைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்தல்
- புத்தகயாவை மீட்டெடுக்க நடவடிக்கை மேற்கொள்ளல்

*B* • **ஹிக்கடுவே ஸ்ரீ சுமங்கள தேரர்**

- மாளிகாகந்தையில் வித்தியோதயப் பிரிவெனாவை நிறுவுதல்
- பாரம்பரிய சிங்கள நூல்களை எழுதுதலும் / மொழிபெயர்த்தமையும்
- அரிச்சுவடி ஒன்றை உருவாக்கல்

*C* • **பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள்**

- இந்துசமய மறுமலர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றினார்
- சிங்கள - தமிழ் மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்த அரும்பாடுபட்டார்
- யாழ்ப்பாணத்தில் பரமேஸ்வராக் கல்லூரியையும் இராமநாதன் பெண்கள் கல்லூரியையும் தமது சொந்த செலவில் கட்டுவித்தார்

*D* • **ஆறுமுக நாவலர் அவர்கள்**

- இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் ஆரம்பகர்த்தா
- யாழ்ப்பாணத்தில் வண்ணார் பண்ணையில் ஆங்கிலப் பாடசாலையை ஆரம்பித்தார்
- பைபிளைத் தமிழில் மொழி பெயர்த்தார்
- 1853 இல் சைவ பரிபாலன சபை, இந்துக் கல்விச் சபை என்பவற்றை ஆரம்பித்தல்
- பாலர்பாடம், பாலபோதினி போன்ற நூல்களை எழுதி கல்வியை விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினார்

*E* • **எம்.ஸி. சித்திலெப்பை அவர்கள்**

- இஸ்லாமிய கலாசார மறுமலர்ச்சியை ஏற்படுத்தியமை
- அரபு மொழியையும் ஆங்கிலத்தையும் கற்பதற்கு மக்களை ஊக்குவித்தமை
- மத்ரஸா என்னும் முஸ்லிம்களின் சமய பாடசாலைகளை காலத்தின் தேவைக்கேற்ப மாற்றியமைப்பதில் ஈடுபட்டார்
- மருதானையில் ஸாஹிராக் கல்லூரியை ஆரம்பித்தார்
- ஞான தீபம், முஸ்லிம் நேசன் போன்ற பத்திரிகைகளை ஆரம்பித்தார்

*F* • **டீ.பீ. ஜாயா**

- சிலோன் முஸ்லிம் ரிவியு" எனும் சஞ்சிகையின் மூலம் முஸ்லிம்களுக்கு கல்வியின் முக்கியத்துவத்தை விளக்கினார்.
- ஸாஹிராக் கல்லூரியின் அதிபராக இருந்து கல்வி வளர்ச்சிக்காக அரும்பணி ஆற்றினார்
- இலங்கையின் முதலாவது பாராளுமன்றத்தில் தொழில் சமூக சேவைகள் அமைச்சராகவும் இருந்து முஸ்லிம் சமூகத்துக்கு அரும்பணியாற்றினார்

**(இவர்களுள் இருவரின் சேவையினை விளக்குவதற்கு 03 + 03 = 06 புள்ளிகள்)**

PAST PAPERS WIKI

**6ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் பற்றிய அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்:**




வினா இலக்கம் 06 இனை 29% மாணோர் தெரிவு செய்துள்ளனர். இவ்வினாவுக்குரிய புள்ளிகள் 18 ஆகும்.

00 - 04 ஆயிடையில் 20%
05 - 09 ஆயிடையில் 38%
10 - 13 ஆயிடையில் 25%
14 - 18 ஆயிடையில் 17%

புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இந்த வினாவுக்கு 14 அல்லது அதற்கு மேல் புள்ளிகளைப் பெற்றோர் 17% மாணோராவர். 20% மாணோர் 04 அல்லது அதைவிட குறைந்த புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினா 9 உபபகுதிகளைக் கொண்டுள்ளது. உபபிரிவான (ii) *C* கூடுதலான இலகுதன்மையக் கொண்டுள்ளதோடு அதன் இலகுதன்மை 89% ஆகும். இலகுதன்மை குறைந்தது (ii) *A* ஆக இருப்பதோடு அதன் இலகுதன்மை 29% ஆகும்.

PAST PAPERS WIKI

பிரித்தானிய யுகத்தில் ஏற்பட்ட அரசியல், பண்பாட்டு மாற்றங்கள் தொடர்பான அறிவையும், சுதந்திரத்தின் பின்னர் இந்நாட்டில் ஏற்பட்ட கல்வி வளர்ச்சி என்பன தொடர்பாகத் துல்லியமாக வெளிப்படுத்தக்கூடிய திறமையைப் பரீட்சித்தல்.

6 வது வினாவின் (i) பிரிவு A, B, C எனும் உபபிரிவின் இலகுதன்மை 46% அல்லது அதற்குக் கூடுதலாக உள்ளது. அதில் அரசியல் யாப்பு, சீர்சிருத்தம், ஆலோசனைகள் என்பன தொடர்பான அறிவு பரீட்சிக்கப்பட்டுள்ளது.

(ii) பிரிவிலும் இலங்கையின் அரசியல் வரலாற்றின் சில நிகழ்வுகளுடன் தொடர்புடைய நபர்கள் பற்றிக் கேட்கப்பட்டுள்ளது. B, C என்பனவற்றுக்கான இலகுதன்மை முறையே 65%, 89% வரையிலான உயர் மட்டத்தில் உள்ளது. அரசியல் மற்றும் கல்வியின் தந்தையர்கள் எனப் போற்றப்பட்டுள்ளவர்கள் பாடசாலை மட்டத்திலும் மதிக்கப்படுபவர்களாக உள்ளமை இவ்வாறான இலகுதன்மைக்கான காரணமாகும். (ii) A பகுதியின் இலகுதன்மை 29% ஆகும். இடதுசாரிகள் தொடர்பாகவும் நாட்டின் அரசியல் நிலைமை தொடர்பாகவும் மாணவர்களின் அவதானம் குறைவாக இருப்பதே இதற்கான காரணமாகும்.

(iii) பிரிவுக்குப் பாடநூலில் கொடுக்கப்பட்டுள்ள விடயங்களுக்கு மேலதிகமான, உண்மையிலேயே நாட்டில் செயற்படுத்தப்படும் கல்வி வளர்ச்சி அனைத்தும் விடைகளில் உதாரணமாக உள்ளடக்கலாம். அவ்வாறே மாணவன் என்ற ரீதியில் தாம் அனுபவிக்கும் வரப்பிரசாதங்கள், பாடசாலையில் ஏற்பட்டுள்ள பௌதீக வளர்ச்சி என்பனவற்றையும் இதில் உள்ளடக்கலாம். எனினும் அதன் இலகுதன்மை 46% இற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பாடநூல், பாடத்திட்டம் என்பன தவிர்ந்த அன்றாட செய்திகள் தொடர்பாக மாணவர்களின் அறிவு குறைந்து காணப்படல், தேடிக் கற்கும் மனநிலை இன்மை, தர்க்க ரீதியாக விடயங்களை முன்வைக்கும் திறமையின்மை என்பன குறைவான இலகுதன்மைக்கான காரணங்களாகும்.

இந்த வினாவின் (iv) வது பிரிவில் இலங்கையின் சமய, பண்பாட்டு மறுமலர்ச்சியுடன் தொடர்புடைய சமயத் தலைவர்களின் சேவை தொடர்பான அறிவு பரீட்சிக்கப்பட்டுள்ளது. அதன் இலகுதன்மை 49% ஆகும். பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ஆறு நபர்களில் இருவரைப் பற்றி எழுதும்படி கேட்கப்பட்டுள்ளது. இவர்களால் ஆற்றப்பட்ட பணிகளை சமயம், பண்பாடு எனப் பிரித்து எழுதும் திறமை குறைவாகக் காணப்படுகின்றது.

வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் இவர்களது உருவம், இவர்கள் பற்றிய தகவல்கள் என்பவற்றை சுவர்ப்பத்திரிகையில் காட்சிப்படுத்துதல், மாணவர்களை குழு செயற்பாட்டில் ஈடுபடுத்துதல், நபர்களின் வாழ்க்கை தொடர்பான நூல்களை ஆக்குவித்தல், பத்திரிகை, சஞ்சிகை, அறிஞர்கள் மூலம் தகவல்கள் சேகரித்தல் என்பன மூலம் அறிவைப் பெற்றுக் கொள்ளலாம். நபர்கள் பற்றிய உடனடிப் பேச்சு நிகழ்த்துதல் மூலமும் அறிவை வளர்த்துக் கொள்ளலாம்.

PAST PAPERS WIKI

## பகுதி III

**வினா 7**

**தேர்ச்சி : வைதிக காலம் தொடக்கம் குப்தர் காலம் வரை இந்தியாவில் சமய மற்றும் கலாசார விருத்தி தொமர்பான அறிவு மற்றும் திறனை அவதானித்தல்.**

**7.** (i) மேல்வரும் $A, B, C$ ஆகியவற்றினால் காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு விடயத்திற்குமுரிய விடைகளை ஒழுங்குமுறையில் எழுதுக.

$A$ - ஆரியர்களின் வருகைக்கு முன்னர் இந்தியாவின் வடமேற்குப் பிரதேசத்தில் பரந்து காணப்பட்ட நாகரிகம்

$B$ - ஆரியர்கள் இந்தியாவுக்குப் புலம்பெயர்வதற்குப் பயன்படுத்திய பிரதானமான கணவாய் வழி

$C$ - 'சப்த சிந்து' பிரதேசத்தின் தற்போதைய பெயர் (03 புள்ளிகள்)

(ii) $A$ - வேத நூல்கள் **இரண்டையும்**

$B$ - வேதகாலத்தில் வழிபடப்பட்ட தெய்வங்கள் **இரண்டையும்**

பெயரிடுக. (04 புள்ளிகள்)

(iii) அசோகப் பேரரசனின் சமயப் பணிகளை **இரண்டு** விடயங்களின் அடிப்படையில் விபரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) குப்தர் காலத்தில் கல்வி, இலக்கியம், கலை ஆகிய துறைகளில் ஏற்பட்ட முன்னேற்றத்தை விளக்குக. (06 புள்ளிகள்)

**7. (i)** $A$ - இந்துநதி / மொஹஞ்ச தாரோ, ஹரப்பா

$B$ - கைபர்

$C$ - பஞ்சாப் **(01 × 03 = 03 புள்ளிகள்)**

**(ii)** $A$ - இருக்கு. யசுர், சாமம், அதர்வணம்

$B$ - அக்னி, வருணன், இந்திரன், யமன், பூமி **(01 × 04 = 04 புள்ளிகள்)**

**(iii)**
- ★ மூன்றாவது பௌத்த மகா நாட்டைக் கூட்டுதல்
- ★ சமயத் தூதுவர்களை ஒன்பது நாடுகளுக்கு அனுப்புதல்
- ★ ஏனைய சமயங்களுக்கு அனுசரணை வழங்கியமை
- ★ தூபிகளை அமைத்தல் (சாஞ்சி தூபி உட்பட)
- ★ தர்ம மகாமாத்ராக்கள் என்ற பெயருடைய அதிகாரிகள் நியமிக்கப்படல்

**(இரண்டு வழிகளை விளக்குவதற்கு 02 + 03 = 05 புள்ளிகள்)**

**(iv)** ● **கல்வி**
- புகழ் பெற்ற பல்கலைக்கழகங்கள் இக்காலத்தில் வளர்ச்சியடைதல் (நாலந்த, வலபி)
- பரந்த விடயப் பரப்புடன் (கலைத்திட்டம்) கல்வியைப் பெறக் கூடியதாக இருந்தது
- குருகுல கல்வியாக விளங்கியது
- பௌத்த ஆராமைக் கல்வி காணப்படல்

● **கலை, இலக்கியம்**
- சமஸ்கிருத இலக்கியம் வளர்ச்சியுற்றது
- உயர்தரமான இலக்கியப்படைப்புக்கள் உருவானது (சகுந்தலை, மேகதூதம்)
- நவரத்தினங்கள் என்றழைக்கப்பட்ட ஒன்பது அறிஞர்கள் இக்காலத்தில் வாழ்ந்தனர். (காளிதாசர் முதலானோர்)
- மதுரா மரபு முறையான சிற்பங்கள்.
- இந்து கடவுளின் சிலைகளைச் செதுக்குதல்.
- அஜந்தா, எல்லோரா போன்ற குகை ஓவியங்கள்

**(மேற் குறிப்பிட்ட துறைகளின் அபிவிருத்தியை விவரிப்பதற்கு 03 + 03 = 06 புள்ளிகள்)**

PAST PAPERS WIKI

**7ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் பற்றிய அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்:**




07 ஆம் வினாவைத் தெரிவுசெய்தோர் 71% ஆவர். இந்த வினாவுக்கான புள்ளிகள் 18 ஆகும்.

00 - 04 ஆயிடையில் 20%
05 - 09 ஆயிடையில் 29%
10 - 13 ஆயிடையில் 23%
14 - 18 ஆயிடையில் 28%
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவுக்கு 14 அல்லது அதை விட அதிகமான புள்ளிகளைப் பெற்றவர்கள் 28% ஆகும். 20% மானோர் 04 அல்லது அதற்குக் குறைந்த புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இந்த வினாவுக்கான 7 உபபிரிவுகளில் கூடுதலான இலகுதன்மையைக் கொண்ட உபபிரிவு (i) *B* ஆக இருப்பதுடன் அதன் இலகுதன்மை 90% ஆகும். இலகுதன்மை குறைந்த உபபகுதியான விளங்குவது (iv) ஆகும். அதன் இலகுதன்மை 46% ஆகும்.

PAST PAPERS WIKI

வேதகாலம் தொடங்கி குப்தர் காலம் வரை இந்திய சமயப் பண்பாட்டு வளர்ச்சி தொடர்பான அறிவையும், விளக்கத்தையும் பரீட்சித்தல் இவ்வினாவின் நோக்கமாகும்.

*(i)* இன் A, B, C எனும் உபபிரிவின் மொத்த இலகுதன்மை 74.7% மான உயர்வான இலகுதன்மையுடையதாக விளங்குகின்றது. B பிரிவு 90% உயர் இலகுதன்மையுடையதாக உள்ளது. 6 ஆந் தரம் தொடக்கம் உலக பண்பாட்டுப் பரம்பல் தொடர்பான அறிவு இருந்தமையானது இவ்வாறான உயர் இலகுதன்மையில் தாக்கம் செலுத்தியுள்ளது.

இந்த வினாவின் *(ii)* பிரிவுக்கு அமைய முழு இலகுதன்மை 56.5% ஆகும். ஆரியர்களின் சமய வழிபாடு தொடர்பான அறிவை வினாவுதல் இவ்வினாவில் உள்ளடக்கப்பட்டுள்ளது. கீழ் வகுப்பு முதல் மாணவர்கள் இவ்விடயம் தொடர்பான ஆரம்ப அறிவைப் பெற்றிருப்பது கூடிய இலகுதன்மைக்கான காரணமாகும்.

*(iii)* ஆம் பிரிவில் அசோக பேரரசனின் சமயப் பணி தொடர்பான விபரங்களின் அறிவைப் பரீட்சித்தல் எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் இலகுதன்மை 62% ஆகும். பேரரசு பற்றிய தகவல்களைப் பெறக்கூடிய வேறு பல ஆதாரங்கள் உள்ளமையானது உயர் இலகுதன்மைக்கான காரணமாகும். பாடநூலில் குறிப்பிடப்பிடப்பட்டுள்ள விடயங்களின் மூலம் தெளிவான விளக்கத்தைப் பெறக்கூடியதாக இருப்பதும் இதற்கான மற்றுமொரு காரணமாகும். இலங்கைக்குப் பௌத்த சமயம் கொண்டு வரப்படல் தொடர்பான நிகழ்விலும் இது குறிப்பிடப்படுதலும் இவ்வினாவுக்கு விடையளிப்பதில் தாக்கம் செலுத்தியுள்ளது.

*(iv)* பிரிவின் இலகுதன்மை 46% ஆகும். குப்த யுகத்தின் இலக்கியம் கலை, கல்வி தொடர்பான அறிவு எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தியாவில் குப்த யுகத்தில் கல்வி, இலக்கியம், கலை ஆகிய விடயங்கள் தொடர்பான வளர்ச்சியை உதாரணங்களுடன் முன்வைத்தல் எதிர்பார்க்கப்படுகின்றது. கேட்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் விடயங்களை முன் வைக்காமை குறைந்த இலகுதன்மைக்கான காரணமாகும்.

குப்தர் கால முக்கிய அரசர்களைக் குறிப்பிட்டு, அவர்களின் செயற்பாடுகள், சேவைகள் என்பன தொடர்பாக மாணவர்களுக்கு அறிவை வழங்குவதன் மூலம் அடைவு மட்டத்தை உயர்த்தலாம்.

PAST PAPERS WIKI

**வினா 8**

**தேர்ச்சி : பிரித்தானியக் குடியேற்ற ஆட்சியின்போது இந்திய மக்கள் தலைவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைககளையும் குடியேற்றவாதக் கொள்கைகளையும் பற்றிய விமர்சிக்கும் திறனை அவதானித்தல்.**

**8.** (i) *A* - 'கல்கத்தாவில் இந்திய கழகம்' தாபிக்கப்பட்டமை

*B* - 'இந்திய தேசிய ஒன்றியம்' ஆரம்பிக்கப்பட்டமை

*C* - இந்திய முஸ்லிம்களுக்கு வேறானதொரு இராச்சியத்தின் தேவைப்பாடு முதன்முதலில் எடுத்துக்காட்டப்பட்டமை

ஆகிய விடயங்களுடன் தொடர்புடையவர்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவுசெய்து, ஒழுங்குமுறையில் குறிப்பிடுக.

(மகாத்மா காந்தி, முகமது இக்பால், முகமது அலி ஜின்னா, எலன் ஒக்டேவியன் ஹியூம், கர்சன் சாமி, சுரேந்திரநாத் பனார்ஜி) (03 புள்ளிகள்)

(ii) இந்தியத் தேசிய காங்கிரசின் அடிப்படை நோக்கங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) கி.பி. 1857 ஆம் ஆண்டின் இந்தியக் கிளர்ச்சிக்கான உடனடிக் காரணத்தைக் குறிப்பிட்டு, அந்தக் கிளர்ச்சி தோல்வியடைவதிற் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் **மூன்றைக்** குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(iv) கி.பி. 1947 இல் இந்தியா இரண்டாகப் பிளவுபடுவதற்குப் பிரித்தானியர் கையாண்ட கொள்கைகள் ஏதுவான விதத்தை **இரண்டு** விடயங்களின் துணையுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

**8. (i)** *A* - சுரேந்திரநாத் பனார்ஜி

*B* - எலன் ஒக்டேவியன் ஹியும்

*C* - முகமது இக்பால்

**(01 × 03 = 03 புள்ளிகள்)**

**(ii)**
- ⋆ இந்திய மக்களிடையே நாட்டுப்பற்றை ஏற்படுத்துதல்
- ⋆ நாட்டில் பொதுசன அபிப்பிராத்தைப் பெறுதல்
- ⋆ இனம், மதம், பிரதேசம் என்பவற்றை கருத்தில் கொள்ளாது தேசியவாதத்தை வளர்த்தல்
- ⋆ பொதுத் தேசிய அபிலாசைகளை பிரித்தானியரிடம் முன்வைத்தல்

**(01 × 04 = 04 புள்ளிகள்)**

**(iii) உடனடிக்காரணம்**

- ⋆ கொழுப்புப் பூசப்பட்ட தோட்டாக்கள் பயன்படுத்தப்பட்டமை

**தோல்வியடைந்தமைக்கான காரணிகள்**

- ⋆ ஒழுங்கான திட்டமின்மை
- ⋆ வினைத்திறன் மிக்க தலைமைத்துவம் இன்மை
- ⋆ பொதுமக்களின் ஒத்தழைப்பு இன்மை
- ⋆ செல்வமும் படைப்பலமுமுள்ளவர்கள் இக்கலகத்திற்கு ஆதரவு வழங்காமை
- ⋆ பிரித்தானியரின் படைப்பலம்
- ⋆ பொதுக் குறிக்கோள் இல்லாமை

PAST PAPERS WIKI

**(கிட்டிய காரணியிற்கு 02 புள்ளிகள்)**

**(மூன்று காரணிகளுக்கு 03 புள்ளிகள்)**

**(மொத்தம் 05 புள்ளிகள்)**

**(iv)** இந்து முஸ்லிம் பேதத்தை ஏற்படுத்துவதற்குரிய பிளவை ஏற்படுத்தி ஆளுவது அவர்களின் கொள்கையாகும்.

- 1906 இல் வங்களாத்தை இரண்டாகப் பிரித்தனர்
- 1906 இல் முஸ்லிம் லீக்கை உருவாக்க முஸ்லிம் தலைவர்களைத் தூண்டல்

**(இவ்வாறான காரணிகளைக் கொண்டு விவரிப்பதற்கு 03 + 03 = 06 புள்ளிகள்)**

**8ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் பற்றிய அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்:**




08 ஆம் வினாவை 25% த்தினர் தெரிவுசெய்துள்ளனர். இந்த வினாவுக்கான புள்ளிகள் 18 ஆகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 00 | - | 04 | ஆயிடையில் | 58% |
| 05 | - | 09 | ஆயிடையில் | 22% |
| 10 | - | 13 | ஆயிடையில் | 11% |
| 14 | - | 18 | ஆயிடையில் | 9% |

புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இந்த வினாவுக்கு 14 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றோர் 9% ஆவர். 58% த்தினர் 04 புள்ளிகளை அல்லது அதற்குக் குறைந்த புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இந்த வினாவுக்குரிய உபபகுதிகள் 4 ஆகும். கூடிய இலகுதன்மையைக் கொண்டது. (iii) உபபிரிவாக இருப்பதோடு அதன் இலகுதன்மை 40% ஆகும். இலகுதன்மை குறைந்த உபபிரிவு (iv) ஆக விளங்குவதோடு அதன் இலகுதன்மை 18% ஆகும்.

PAST PAPERS WIKI

பிரித்தானியரது ஆட்சிக் காலத்தில் இந்திய மக்கள் தலைவர்களது செயற்பாடுகள் மற்றும் குடியேற்ற நாடுகள் தொடர்பான கொள்கை என்பன தொடர்பான அறிவினைப் பரிசீலித்தல் இவ்வினாவின் நோக்கமாகும். இவ்வினாவை 25% த்தினரே தெரிவு செய்துள்ளனர்.

இவ்வினாவின் 1வது பிரிவில், இந்தியா, பிரித்தானியரின் குடியேற்ற நாடாக இருந்தபோது அந்நாட்டின் அரசியல் நடவடிக்கை தொடர்பான நிகழ்வுகள் சிலவற்றை முன்வைத்து, அவை தொடர்பாக செயற்பட்ட நபர்கள் யாவர் எனக் கேட்கப்பட்டுள்ளது. மாணவர்கள் இலகுவாக விடையளிக்கும் பொருட்டு இவற்றிற்குப் பொருத்தமான விடைகள் அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளன. எனினும் சரியான விடையைத் தெரிவு செய்வதற்கான அறிவு குறைவாகக் காணப்படுகின்றமையானது இவ்வினாவின் இலகுதன்மை குறைவிற்கான காரணமாகும். இதன் இலகுதன்மை 33% ஆகும்.

வினாத்தாளில் *(iii)* ஆவது பகுதியில் 4 வினாக்களில் 2 வினாக்களையே தெரிவு செய்யவேண்டியுள்ளதால் இலகுவான வினாக்களை மாணவர்கள் தெரிவுசெய்துள்ளனர். இவ்வினாவைத் தெரிவு செய்தோரில் 58% த்தினர் 4 அல்லது அதற்குக் குறைந்த புள்ளிகளையே பெற்றுள்ளனர்.

கூடிய இலகுதன்மை *(iii)* வது பிரிவாகக் காணப்படுவதோடு அதன் இலகுதன்மை 40% ஆகும். *(iv)* வது பிரிவு குறைந்த இலகுதன்மையுடையதாகக் காணப்படுகின்றது. அது 18% ஆகும். 25% த்தினர் மாத்திரம் இவ்வினாவைத் தெரிவு செய்வதற்குப் பாடப்பரப்பு பரவலாக இருப்பது காரணமாக இருக்கலாம்.

இவ்வினாவின் *(iii)* வது பகுதி கூடிய இலகுதன்மையைக் காட்டுவதற்கான காரணம் பிரித்தானிய ஆட்சியில் இருந்து விடுதலை அடையும் பொருட்டு இலங்கையும், இந்தியாவும் மேற்கொண்ட போராட்டம் தொடர்பாக மாணவரின் அறிவு உயர்வாக இருப்பதாகும். மொத்தமாக இந்த வினாவுக்கான இலகுதன்மை 50% த்திற்கும் குறைவாகும். சிறப்பாக மாணவர்கள் இந்தப் பாடத்தில் காட்டும் குறைவான அவதானமானது இலகுதன்மை குறைவதற்கான காரணமாகும்.

இந்தத் தலைப்பு தொடர்பாகக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின்போது இணையத்தளத்திலிருந்து விபரங்களைப் பெற்றுக்கொள்ள வழிவகுத்தல், உரிய விடயம் தொடர்பாக சரியான தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல் போன்ற செயற்பாடுகளின் மூலம் அடைவு மட்டத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கை எடுத்தல் பொருத்தமானதாகும்.

PAST PAPERS WIKI

**வினா 9**

**தேர்ச்சி : ஐரோப்பியரின் அதிகாரப் பரவலாக்கம் பற்றிய அறிவு மற்றும் திறனை விமர்சன ரீதியாக அவதானித்தல்.**

**9.** (i) ஐரோப்பாவில் முதன்முதலில் உருவான தேசிய அரசுகள் **மூன்றைப்** பெயரிடுக. (03 புள்ளிகள்)

(ii) மேல்வரும் *A, B, C, D* ஆகியவற்றினாற் குறிப்பிடப்படும் தகவல்களுடன் தொடர்புடையவர்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவுசெய்து, ஒழுங்குமுறையிற் குறிப்பிடுக.

*A* - மேற்கிந்தியத் தீவுகளைக் கண்டுபிடித்தல்

*B* - முதன்முதலாக ஆபிரிக்காவின் தென்முனைக்குப் பயணம் செய்தல்

*C* - பிலிப்பைன் தீவுகள் கண்டுபிடிக்கப்படல்

*D* - புவியீர்ப்புக் கொள்கை கண்டுபிடிக்கப்படல்

(சேர் ஐசாக் நியூட்டன், கலிலியோ கலிலி, கிறிஸ்தோபர் கொலம்பஸ், வாஸ்கொடகாமா, பார்த்தலோமியஸ் டயஸ், மகலன், கடலோடி ஹென்றி, பிரான்சிஸ்கோ த அல்மேதா) (04 புள்ளிகள்)

(iii) தேசிய அரசொன்றின் பண்புகள் **மூன்றை** விபரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) *A* - ஸ்பானிய தேசத்தவர்கள் அமெரிக்கப் பிரதேசங்களிலும்

*B* - போர்த்துக்கேயர் கீழைத்தேயப் பிரதேசங்களிலும்

அதிகாரத்தைப் பரவலாக்கும்போது பின்பற்றிய நடவடிக்கைகளுக்கு **ஒவ்வோர்** உதாரணம் தந்து, விளக்குக. (06 புள்ளிகள்)

**9. (i)** இங்கிலாந்து, ஸ்பெய்ன், பிரான்ஸ், ஒல்லாந்து, போர்த்துக்கல் (பிரித்தானியா)

**(01 × 03 = 03 புள்ளிகள்)**

**(ii)** *A* - கிறிஸ்தோபர் கொலம்பஸ்

*B* - பார்த்தலோமியஸ் டயஸ்

*C* - மகலன்

*D* - சேர் ஐசாக் நியூட்டன்

**(01 × 04 = 04 புள்ளிகள்)**

**(iii)**
- ⋆ அரசரை மையமாகக் கொண்டு சகல அதிகாரங்களையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்ட ஆட்சி முறை
- ⋆ அரசருக்கு நிரந்தரமான இராணுவப்படை ஒன்று இருந்தது
- ⋆ புதிய சமூக வகுப்புக்கள் தோற்றம் பெற்றமை
- ⋆ ஒரே சட்டமுறையும் வரிமுறையும் உருவாக்கப்பட்டமை
- ⋆ புதிய உத்தியோகத்தர் வர்க்கம் தோற்றம் பெற்றமையும் வளர்ச்சியடைந்தமையும்

**(இவ்வாறான மூன்று காரணிகளை விவரிக்க 02 + 03 = 05 புள்ளிகள்)**

**(iv)** *A* - ஆதிக்கத்தைக் கட்டியெழுப்புவதற்காக மிகவும் கொடூரமான பயங்கரமான செயற்பாடுகளை மேற்கொண்டனர். (நஞ்சூட்டல், துப்பாக்கிப் பிரயோகம் செய்தல்)

- புராதன நாகரிகங்களை அழித்து அங்கிருந்த பெறுமதிமிக்க வளங்களைக் கொள்ளையடித்தனர் (மாயா, இன்கா)

உ+ ம் (மெக்சிக்கோ, பேரு)

PAST PAPERS WIKI

*B* - வர்த்தக நிலையங்களையும் கோட்டைகளையும் அமைத்து தமது ஆதிக்கத்தைப் பலப்படுத்தல்
- நட்புறவாக செயற்படல்
- உடன்படிக்கைகள் மூலம்
- ஆயுத உதவி அளிப்பதன் மூலம்
- மதம் பரப்புதல் மூலம்

**(ஒவ்வொரு வழிமுறைகள் வீதம் விவரிப்பதற்கு 03 + 03 = 06 புள்ளிகள்)**

**9ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் பற்றிய அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்:**




09 ஆம் வினாவை 39% த்தினர் தெரிவு செய்துள்ளனர். இந்த வினாவுக்கான புள்ளிகள் 18 ஆகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 00 | - | 04 | ஆயிடையில் | 62% |
| 05 | - | 09 | ஆயிடையில் | 23% |
| 10 | - | 13 | ஆயிடையில் | 8% |
| 14 | - | 18 | ஆயிடையில் | 7% |

புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இந்த வினாவுக்கு 14 அல்லது அதற்குக் கூடிய புள்ளிகளைப் பெற்றோர் 7% ஆகும். 62%த்தினர் 04 அல்லது அதற்கும் குறைந்த புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இந்த வினாவுக்கான உபபிரிவு 8 ஆக இருப்பதுடன் கூடிய இலகுதன்மையாக இருப்பது உபபிரிவு (ii) *D* ஆகும். அதன் இலகுதன்மை 86% ஆகும். குறைந்த இலகுதன்மை கொண்டது (iii), (iv) *A* ஆக இருப்பதோடு அதன் இலகுதன்மை 20% ஆகும்.

இந்த வினா ஐரோப்பிய அதிகாரப் பரவல் தொடர்பான விளக்கத்தைப் பரீட்சிக்கும் பொருட்டுக் கேட்கப்பட்டது. 9 (i) பகுதியில் தோற்றம் பெற்ற தேசிய அரசுகள் மூன்றைப் பெயரிடும் திறமையைப் பரீட்சித்தல் ஆகும். அதன் இலகுதன்மை 44% ஆகும்.

9 (ii) பகுதியில் A, B, C என்பவற்றின் இலகுதன்மை முறையே 37%, 32%, 25% ஆக இருப்பதுடன் D பகுதியின் இலகுதன்மை 86% ஆக உயர்ந்துள்ளது. இந்த வினாவுக்கான விடையை அடைப்புக் குறிக்குள்ளிருந்து தெரிவு செய்ய வேண்டியுள்ளது. எனினும் A, B, C பகுதிகளில் விடைகளை சரியாகத் தெரிவு செய்யும் அளவுக்குப் பாட அறிவு இல்லை. D பகுதிக்கான இலகுதன்மை மிக உயர்ந்த மட்டத்தில் இருப்பதற்கான காரணம் விஞ்ஞான பாடத்திலிருந்து பெற்ற அறிவாக இருக்கலாம்.

9 (iii) பகுதியின் இலகுதன்மை 20% ஆகும். தேசிய அரசின் பண்புகள் இதில் கேட்கப்பட்டுள்ளது. பாடநூலில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களைக் கிரகிக்காமை குறைந்த இலகுதன்மைக்கான காரணமாக இருக்கலாம். பாட விடயத்தை உரியவாறு முன்வைக்கத் தவறியமையை மதிப்பீட்டின்போது அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

9 (iv) பகுதியின் மொத்த இலகுதன்மை 21.5% ஆகும். வினாவை சரியாக விளங்கிக் கொள்ளாது விடையளித்தமை இவ்வாறான குறைவான அடைவு மட்டத்திற்கான காரணமாகும்.

பாடநூலைப் பயன்படுத்துதல், உபகரணங்கள் மூலம் கற்பித்தலை மேற்கொள்ளல், பாடப்பரப்பு தொடர்பாகப் பல்வேறு வழிகளில் விடயங்களைத் தேடி சேகரித்தல் என்பவற்றில் மாணவர்களுக்கு ஊக்கமளித்தலின் மூலம் அடைவு மட்டத்தை உயர்த்தலாம்.

PAST PAPERS WIKI

**வினா 10**

**தேர்ச்சி : உலக மகா யுத்தங்களுக்குப் பின்னணியான காரணிகளையும், அதனால் ஏற்பட்ட விளைவுகளையும் பற்றி விமர்சன ரீதியாக அவதானித்தல்.**

**10.** (i) முதலாவது உலகப் போரின்

*A* - உடனடிக் காரணம்

*B* - அதில் சம்பந்தப்பட்ட ஜேர்மனிய ஆட்சியாளரின் பெயர்

*C* - அமெரிக்க ஐக்கிய அரசுகள் சம்பந்தப்படுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணம்

ஆகியவற்றைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) இரண்டாம் உலகப் போரில்

*A* - நட்பு நாட்டுப் படைகளுக்குத் தலைமைதாங்கிய பிரித்தானியப் பிரதமரையும்

*B* - ஹிட்லரின் கொடூரமான சித்திரவதைக்குட்பட்ட மக்கட் குழுவினரையும்

*C* - கிழக்கில் ஜப்பானியர் கைப்பற்றிய நட்பு நாடுகளின் பிரதானமான இராணுவத் தளத்தையும்

*D* - இத்தாலியை போரில் ஈடுபடுத்திய அந்நாட்டின் பாசிச தலைவரையும்

அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவுசெய்து, *A, B, C, D* ஒழுங்கில் குறிப்பிடுக.

(ஹிரோஹித்தோ பேரரசன், முசோலினி, யுதேவ், ஸ்லாவ், சிங்கப்பூர், கல்கத்தா, வின்சன்ட் சேர்ச்சில், கிளெமன்ட் எட்லி) (04 புள்ளிகள்)

(iii) இரண்டாம் உலகப் போர் இதுவரை உலகில் ஏற்பட்ட மோசமான பெருங்கேடு என்பதனை **இரண்டு** காரணங்களின் துணையுடன் விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) இரண்டாம் உலகப் போரின் பின்னர் உலக அரசியலில் ஏற்பட்ட மாற்றங்கள் **மூன்றை** விபரிக்குக. (06 புள்ளிகள்)

**10. (i)** *A* - சரஜிவோ சம்பவம்

*B* - இரண்டாம் வில்லியம் கைஸர்

*C* - லுசிதானியா கப்பலை மூழ்கடித்தல் **(01 × 03 = 03 புள்ளிகள்)**

**(ii)** *A* - வின்ஸ்டன் சேர்ச்சில்

*B* - யூதர் (யுதெவ்)

*C* - சிங்கப்பூர்

*D* - முசோலினி **(01 × 04 = 04 புள்ளிகள்)**

**(iii)**
- ⋆ பாரிய உயிர்ச்சேதம்
- ⋆ சொத்துக்கள் அழிதல்
- ⋆ இலட்சக் கணக்கான மக்கள் அகதிகள் ஆதல்
- ⋆ அணுகுண்டு பயன்படுத்தப்படல்
- ⋆ சூழல் மாசடைதலும் சூழல் அழிவும்

**(இரண்டு விடயங்களைக் கொண்டு விவரிப்பதற்கு 02 + 03 = 05 புள்ளிகள்)**

**(iv)**
- ⋆ குடியேற்ற ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெறல் - இலங்கை, இந்தியா
- ⋆ புராதன. வல்லரசு நாடுகளின் பலம் வீழ்ச்சியடைதிருந்தமை (பிரித்தானியா, பிரான்ஸ்)
- ⋆ உலகம் இரு வல்லரசு அணிகளாக பிரிதல்
- ⋆ ஜேர்மனி இரண்டாகப்பிரிதல் - ஐக்கிய அமெரிக்கா - சோவியட் ரஷ்யா
- ⋆ புதிய அரசுகள் தோற்றம் பெறல் (இஸ்ரேல், யூகோஸ்லேவியா)
- ⋆ ஐக்கிய நாடுகள் சபையின் உதயம்
- ⋆ பனிப் போர் **(மூன்று மாற்றங்களை விவரிப்பதற்கு 03 + 03 = 06 புள்ளிகள்)**

PAST PAPERS WIKI

**10ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் பற்றிய அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்:**




10 ஆவது வினாவை 60% மாணோர் தெரிவு செய்துள்ளனர். இந்த வினாவுக்கான புள்ளிகள் 18 ஆகும்.

00 - 04 ஆயிடையில் 29%
05 - 09 ஆயிடையில் 31%
10 - 13 ஆயிடையில் 22%
14 - 18 ஆயிடையில் 18%

புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவுக்கு 18% மாணோர் 14 அல்லது அதற்கு மேலான புள்ளிகளைப் பெற்றுள்ளனர். 29% மாணோர் 04 அல்லது அதற்குக் குறைந்த புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினாவில் 9 உபபிரிவுகள் உள்ளன. (i) *A* உபபிரிவு கூடுதலான இலகுதன்மையுடையதாகக் காணப்படுவதோடு அதன் இலகுதன்மை 75% ஆகும். (i) *B* உபபிரிவு குறைந்த இலகுதன்மையுடையதாகக் காணப்படுவதோடு அதன் இலகுதன்மை 9% ஆகும்.

உலக யுத்தம் ஏற்படுவதற்கான காரணங்களையும் அதன் விளைவுகளையும் பரீட்சித்தல் இந்த வினாவின் நோக்கமாகும்.

இந்த வினாவின் *(i)* பகுதியில் முதலாம் உலக மகா யுத்தத்திற்கான தகவல்களின் அடிப்படையில் அறிவு பரீட்சிக்கப்படுகின்றது.

*(i)* A, C பகுதிகளில் இலகுதன்மை 50% தை அதிகரித்துள்ளது. மாணவர்கள் உலக யுத்தத்தின் நிகழ்வுகள் பற்றி நன்கு விளங்கிக் கொண்டிருப்பதே உயர்வான அடைவு மட்டத்திற்கான காரணமாகும். B பகுதி குறைந்த இலகுதன்மை கொண்டதாகக் காணப்படுவதற்கான காரணம் யுத்தத்துடன் தொடர்புடைய நபர்களின் பெயர்களை சரியாகக் குறிப்பிட முடியாமையாகும். இதன் இலகுதன்மை 9% ஆகும்.

*(ii)* பகுதியில் A, B, D ஆகியவற்றின் இலகுதன்மை முறையே 72%, 73%, 74% ஆக இருப்பதுடன் C 30% மான குறைந்த இலகுதன்மையைக் காட்டுகின்றது. இந்த வினாவுக்கான விடைகளை அடைப்புக்குறிக்குள்ளிருந்து தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. உலக வரலாற்றில் மக்கள் மனதில் பதிந்த தலைப்பாக இருப்பதானது மாணவர்களின் அவதானத்தைப் பெற்று உயர் இலகுதன்மையைக் காட்டுகின்றது. எனினும் C யில் எதிர்பார்க்கப்பட்ட விடையைத் தெரிவு செய்வதில் சிக்கலை எதிர்நோக்கியமையானது குறைந்த இலகுதன்மைக்கான காரணமாக உள்ளது.

*(iii)* பகுதி 55% இலகுதன்மையைக் காட்டுகின்றது. இதில் இரண்டாவது உலக யுத்தத்தினால் உலகில் ஏற்பட்ட அழிவுகள் தொடர்பான அறிவு பரீட்சிக்கப்படுகின்றது. இந்த வினாவில் எதிர்பார்க்கப்பட்ட விடயங்கள் பாடநூலில் மட்டுமன்றி வேறு நூல்களில் இருந்தும் பெறக்கூடியதாக இருக்கின்றமை இலகுதன்மை அதிகமாக இருப்பதற்குக் காரணமாகும்.

*(iv)* பகுதிக்கான இலகுதன்மை 42% ஆகும். அதில் இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவின் பின்னர் உலக அரசியலில் ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்பான அறிவு பரீட்சிக்கப்படுகின்றது. இந்த வரலாற்று விடயம் தொடர்பாகப் பாடநூலில் தெளிவான பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும், இது தொடர்பாக விடையெழுதக்கூடிய திறமை இன்மையால் இலகுதன்மை குறைந்துள்ளது. எனவே உலக யுத்தம் பற்றிக் கற்பித்தல் நடவடிக்கையின்போது ஒன்றுடன் ஒன்றை ஒப்பிட்டு வரிசைப்படுத்தி, ஒப்படை மூலம் முக்கிய விடயங்கள் தொடர்பாக விளக்கம் அளித்தல் என்பவற்றில் மாணவர்களை ஈடுபடுத்தல் அவசியமாகும். நாளாந்தம் நாட்டிலும், உலகிலும் செயற்படும் அரசியல் நிலைமைக்கான பின்னணியையும், மேற்கூறப்பட்ட விடயங்கள் நடைமுறையில் நிகழ்கின்றது என்பதை காலத்துக்கேற்ற தலைப்பு மூலம் கலந்துரையாடுதலும் பாட அறிவை உயர்த்துவதற்கு வழிவகுக்கும்.

PAST PAPERS WIKI

2.2.3 II ஆம் வினாத்தாளிற்கு அளிக்கப்பட்ட விடைகள் தொடர்பான முழுமையான அவதானிப்புகளும், முடிவுகளும், ஆலோசனைகளும் :




பகுதி I

முதலாம் பகுதியில் முதலாம் வினா மட்டும் அடங்குவதுடன் அது கட்டாய வினாவாகும். இந்த வினா (அ) (i), (ii) (ஆ) (i), (ii), (iii) ஆகிய உபபகுதிகளைக் கொண்டது. இந்த வினாவுக்கான புள்ளிகள் 30 ஆகும். இலங்கை வரலாற்றுக்கான தகவல்கள் (அ) (i), (ஆ) (i) A, (ii) 1, 2, 3, 4, (iii) 1, 2, 3, 4 எனும் உபபகுதியில் காணப்படுகின்றது. உலக வரலாற்றுக்கான தகவல்கள் (அ) (ii), (ஆ) (i) B, C, D, எனும் உபபகுதியில் காணப்படுகின்றது. முதலாவது வினாவின் இலகுதன்மை இலங்கை வரலாற்றுக்கு 42% மும், உலக வரலாற்றுக்கு 32% மும் ஆகும்.

இலங்கை வரலாற்றுடன் தொடர்புடைய வினாக்களில் (ஆ) பகுதியின் (iii) 1 எனும் உபபிரிவு கூடுதலான இலகுதன்மையுடையதாகக் காணப்படுகின்றது. அதன் இலகுதன்மை 79% ஆகும். அதில் இலங்கையில் இராசரட்டைக் காலத்தின் கட்டிடக் கலையின் காவற்சிலை உருவம் தொடர்பான தகவலாகும். தற்காலத்திலும் பல புனித ஸ்தானங்களில் இவ்வாறான உருவங்கள், கலை நிர்மாணங்களைக் காணக்கூடியதாக உள்ளது. எனவே அதனைப் பெயரிடக்கூடியதாக இருந்தமை மேற்கூறிய வினாவுக்குக் கூடிய இலகுதன்மையை அடையக் கூடியதாக இருந்தது.

உலக வரலாற்றில் அதிக இலகுதன்மை காணப்படுவது (ஆ) (i) D உபபகுதியிலாகும். அதன் இலகுதன்மை 77% ஆகும். தொலைபேசியைக் கண்டுபிடித்த அமெரிக்க இனத்தவரின் பெயர் மாத்திரமே அதில் கேட்கப்பட்டுள்ளது. கீழ் வகுப்புகளில் விஞ்ஞான பாடத்திலும், பொது அறிவிலும், பத்திரிகை மற்றும் தொடர்புசாதனங்களின் மூலமும், விளையாட்டு, விநோத செயற்பாடுகளின்போது முன்வைக்கப்படும் மாதிரி வடிவமைப்புகளின்போது இப்பெயர் தொடர்புபடுத்தப்படுவதால் இலகுதன்மை உயர் மட்டத்தை அடைந்துள்ளது.

இலங்கை வரலாற்றில் குறைந்த இலகுதன்மையுடையதாகக் காணப்படுவது (ஆ) (ii) 4 உபபகுதியாகும். இதில் தரப்பட்டுள்ள உருவின் (சத்மஹால் பிரசாதய) சுவர் வளைவில் உள்ளது தொடர்பாகக் கேட்கப்பட்டுள்ளது. களப் பயணங்களின்போதுகூட இது தொடர்பான சிறப்பான தகவல்களைப் பெற முடியாமையும், பாடநூலில் உள்ள படங்களில் அப்பகுதி துல்லியமாகத் தெரியாமையும் இலகுதன்மை குறைவடைவதற்கான காரணங்களாகும்.

உலக வரலாற்றுப் பகுதியில் குறைந்த இலகுதன்மையுடையதாகக் காணப்படுவது (ஆ) (i) C உபபகுதியாகும். அதில் இந்தியா, பிரித்தானியா என்பன தொடர்புடைய அரசியல் தகவல்கள் வினவப்பட்டுள்ளன. இரு நாடுகளுடனும் தொடர்புடைய காலப்பகுதி, நபர்களின் பெயர்கள் தொடர்பான குறைந்த அறிவு என்பன குறைவான இலகுதன்மைக்கான காரணங்களாகும்.

புறவரிப் படத்தில் குறித்துப் பெயரிடுதல் தொடர்பான இலகுதன்மை இலங்கை, இந்தியா ஆகிய இரண்டிலும் 30% ற்கும் குறைவானதாகும். படத்தில் குறிக்கும்போது அது தொடர்பான அறிவுக் குறைவும், அது தொடர்பாக மாணவர்களது அவதானம் செலுத்தப்படாமையும் சரியான இடங்களில் குறிக்கப்படாமையும் இங்கு காணக்கூடியதாக உள்ள பொதுவான குறைபாடாகும்.படத்தில் குறித்துப் பெயரிடும் பயிற்சியில் மாணவர்களை ஈடுபடுத்துதல், அந்த இடங்களின் அமைவைப் பௌதிக இயல்புகளுடன் தொடர்புபடுத்துதல் என்பனவற்றைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் வகுப்பறையில் மேற்கொள்ள வேண்டும். I, II, III உபபகுதிகளுடன் தொடர்புடைய படங்கள் தொடர்பாகக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பாடப்பிரவேசத்தின்போது நாளொன்றுக்கு ஒரு படம் என்ற ரீதியில் முன்வைத்தல் பொருத்தமாகும்.

PAST PAPERS WIKI

## பகுதி II

இலங்கை வரலாற்றுக்கான இலகுதன்மை 48% ஆகும். இந்தப் பகுதியில் 05 வினாக்கள் உள்ளன. அவற்றில் 03 வினாக்களுக்கு மாத்திரமே விடையளித்தல் வேண்டும். வினாக்கள் தெரிவு செய்திருப்பது 2 - 6 வரை முறையே 88%, 78%, 48%, 59%, 29% ஆகும். இதில் இரண்டாவது வினாவைக் கூடுதலானோர் தெரிவுசெய்துள்ளனர். இந்த வினாவில் அநுராதபுர யுகத்தில் நீர்ப்பாசன நடவடிக்கை, மத்திய நிருவாகம் என்பன தொடர்பான அறிவு எதிர்பார்க்கப்படுகின்றது. எளிமையானதும் தெளிவானதுமான முறையில் விடையளிக்கக்கூடியதாக இருப்பதானது அதிகமான மாணவர்கள் இவ்வினாவைத் தெரிவுசெய்வதற்கான காரணமாக அமைந்துள்ளது. இப்பகுதியில் 06 வது வினாவை மிகக் குறைந்த தொகையினரே தெரிவுசெய்துள்ளனர். அது 29% ஆகும். இவ்வினாவில் பிரித்தானியரது காலத்தில் ஏற்பட்ட அரசியல், பண்பாட்டு மாற்றங்கள் தொடர்பான அறிவும், சுதந்திரத்தின் பின்னர் இந்நாட்டில் ஏற்பட்ட கல்வி வளர்ச்சி என்பன பற்றிய அறிவும் எதிர்பார்க்கப்பட்டது. இந்த வினாவைவிட இலகுவான வினாக்களைத் தெரிவு செய்ய வாய்ப்பிருந்தமையும், மாணவர்கள் மத்தியில் இது அவ்வளவு விரும்பக்கூடிய வினாவாக இல்லாமையும் குறைந்த தொகையினர் இதனைத் தெரிவு செய்வதற்கான காரணங்களாகும்.

## பகுதி III

உலக வரலாற்றின் இலகுதன்மை 41% ஆகும். வினா 07 - 10 வரை மாணவர்கள் தெரிவுசெய்துள்ளமை முறையே 71%, 25%, 39%, 60% ஆகும். 07 வது வினாவைக் கூடுதலானோர் தெரிவுசெய்துள்ளனர். அது 70% த்திற்கும் அதிகம் ஆகும். 08 வது வினாவைக் குறைவானோர் தெரிவுசெய்துள்ளனர். அது 25% ஆகும். இந்தியாவில் வேதகாலம் தொடக்கம் குப்தர் காலம் வரையிலான சமய, பண்பாட்டு வளர்ச்சி பற்றி 07 ஆம் வினாவில் கேட்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் இந்தத் தலைப்பில் வினாக்கள் எடுக்கப்படுவதும், இலங்கையுடன் பண்பாட்டுத் தொடர்பு இருப்பதும் பலர் இதனைத் தெரிவுசெய்துள்ளமைக்கான காரணங்களாகும். மாணவர்களால் குறைவாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள வினா 08 ஆம் வினாவாகும். இவ்வினா குடியேற்றவாதக் காலத்தில் இந்திய மக்கள் தலைவர்களின் செயற்பாடு தொடர்பான அரசியல் பின்னணியுடன் ஒப்பீட்டு ரீதியாக வினவப்பட்டுள்ளது. காலம், நபர்கள் தொடர்பாகக் கிரகிக்கும் ஆற்றல் குறைவாதலும், இதனைவிட இலகுவான வினாக்களைத் தெரிவுசெய்ய வாய்ப்பு இருந்தமையும் இந்த வினாவைக் குறைவான தொகையினர் தெரிவுசெய்தமைக்கான காரணங்களாகலாம். இந்த வினாவைத் தெரிவுசெய்தோரும் குறைந்த புள்ளிகளையே பெற்றுள்ளனர்.

PAST PAPERS WIKI

## பகுதி III

3 விடையளிக்கும்போது அவதானிக்கப்பட வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும் :

3.1 விடையளிக்கும்போது அவதானிக்கப்பட வேண்டிய விடயங்கள் :

**பொது அறிவுறுத்தல்கள் :**

- ⋆ வினாத்தாளிலுள்ள அடிப்படை அறிவுறுத்தல்களை வாசித்து விளங்கிக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு பகுதியிலும் விடையளிக்கப்பட வேண்டிய வினாக்களின் எண்ணிக்கை, கட்டாய வினாக்கள் யாவை, எவ்வளவு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது, புள்ளி ஒதுக்கீடு எவ்வளவு என்பவை பற்றிய விடயங்களைக் கவனத்திற் கொள்வதுடன் வினாக்களை நன்கு வாசித்துத் தெளிவான விளக்கம் பெற்ற பின்னர் விடையளிக்க வேண்டிய வினாக்களைத் தெரிவு செய்து விடையளித்தல் வேண்டும்.
- ⋆ முதலாம் வினாத்தாளிற்கு விடையளிக்கும்போது மிகச் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்தல் வேண்டும். பின்னர் தெளிவாக ஒரு புள்ளடி அடையாளத்தை இடுதல் வேண்டும்.
- ⋆ இரண்டாம் வினாத்தாளிற்கு விடையளிக்கும்போது ஒவ்வொரு பிரதான வினாக்களையும் விடைத்தாளின் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் நன்று.
- ⋆ திருத்தமான தெளிவான கையெழுத்தில் எழுத வேண்டும்.
- ⋆ சுட்டெண்களைத் தெளிவாக ஒவ்வொரு பக்கத்திலும் உரிய இடங்களில் எழுதுதல் வேண்டும்.
- ⋆ வினா இலக்கத்தையும் பகுதி வினாக்களின் இலக்கங்களையும் உபபகுதி வினாக்களின் இலக்கங்களையும் தெளிவாக திருத்தமாக எழுதுதல் வேண்டும்.
- ⋆ சுருக்கமாக விடை எழுத வேண்டியவைக்கு நீண்ட விடைகளையும், விளக்கமாக விடை எழுத வேண்டியவைக்கு சுருக்கமான விடைகளையும் எழுதுவதைத் தவிர்த்தல் வேண்டும்.
- ⋆ வினாக்கள் கேட்கப்படும் விதத்துக்கேற்றவாறு தர்க்க ரீதியாகவும் பகுப்பாய்வு ரீதியாகவும் விடயங்களை முன்வைத்தல் வேண்டும்.
- ⋆ குறிப்பிட்ட வினா எண்ணிக்கைகளுக்கு மட்டும் உரிய நேரத்தில் விடை எழுதுவதுடன் மேலதிக விடைகளை எழுதுவதற்கு நேரத்தை ஒதுக்கக் கூடாது.

**விசேட அறிவுறுத்தல்கள் :**

- ⋆ தேசப்படங்களில் குறித்துப் பெயரிடும்போது கவனத்தில் கொள்ள வேண்டியவை :
    - நகரங்களைக் குறிக்கும்போது மிகச் சரியான இடத்தில் புள்ளியிட்டுப் பெயரிடுதல்.
    - இராச்சியங்கள், குளங்கள் என்பவற்றைக் குறிப்பிட உரிய பிரசேதத்தை நிழற்றிக் காட்டுதல்.
    - ஆறுகள் மலைகள் என்பவற்றைக் குறிக்கும்போது அவற்றை இனங்காணும் விதத்தில் பெயரிடுதல்.
- ⋆ கேட்கப்படும் வினாக்களுக்குப் பொருத்தமானவாறு விடைகளைத் தொகுத்து முன்வைத்தல்.
- ⋆ விடயங்களைக் குறிப்பிடுதல் அவற்றை விளக்குதல், விவரித்தல், சான்றாதாரம் காட்டுதல் என்பவற்றுக்கேற்பவே வினாக்களுக்குரிய புள்ளிகள் வழங்கப்படுகின்றன என்பதை விளங்கிக் கொள்ளுதல்.
- ⋆ கட்டமைப்பு வகை வினாக்களில் உதாரணங்கள், விடயங்கள் என்பவற்றை முன்வைத்தல் வேண்டும்.
- ⋆ உப தலைப்புகளுடன் விடைகளைப் பந்தி பந்தியாக வேறுபடுத்தி எழுதுதல் வேண்டும்.

PAST PAPERS WIKI

**அதிபர்களுக்கான ஆலோசனைகள் :**

- ★ பாட விருத்தியின் பொருட்டு வருடாந்த செயற் திட்டத்தினை தயாரித்து அவற்றைச் செயற்படுத்துவதற்கும் வழிகாட்டுவதற்கும் அனுசரணை வழங்குவதை மேலும் பரவலாக்குதல்.
- ★ பாட விருத்தியின் பொருட்டு உள்ளக மதிப்பீடு, மேற்பார்வை செயன்முறை என்பவற்றை உரிய காலத்தில் திட்டமிட்டு ஒழுங்கான முறையில் செயற்படுத்துதல்.
- ★ ஆசிரியர்களின் பாட அறிவினை விருத்தி செய்வதற்கென கோட்டம், வலயம், அமைச்சு ஆகிய மட்டங்களில் நடாத்தப்படும் கருத்தரங்குகளில் பங்குபற்ற ஆசிரியர்களுக்கு சந்தரப்பம் அளித்தல்.
- ★ கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்குப் பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டங்களைத் திட்டமிட்டு செயற்படுத்த வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- ★ நேர அட்டவணை தயாரிக்கும்போது பாட நிபுணத்துவமுடைய ஆசிரியர்களுக்கு முன்னுரிமை வழங்குதல்.
- ★ ஆசிரியர்களுக்கு அவர்களது பாடந்தொடர்பான பொறுப்பு ஏற்படும் வகையில் பாடத்திட்டத்தை செயற்படுத்தப்பட சந்தர்ப்பம் வழங்குதல். (குறிப்பிட்ட மாணவர் குழுவொன்றை ஒரே ஆசிரியரின் கீழ் சில வருடங்கள் அப்பாடத்தினைக் கற்க வழிசெய்தல்.)
- ★ வருடாந்த பரிசளிப்பு, சான்றிதழ் வழங்குதல் போன்றவற்றில் மேலும் கவனம் செலுத்துதல்.
- ★ வரலாறு பாட அபிவிருத்தியின் பொருட்டுப் பாடசாலையில் காணப்படும் வளங்களுக்கு அமைய இடம், உபகரணங்கள், நூல்கள், புறவுருப்படங்கள் என்பவற்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- ★ ஏனைய பாடங்களில் பயிற்சி பெற்ற அல்லது நியமனம் பெற்ற ஆசிரியர்களின் நேர அட்டவணையை நிறைவு செய்யும் நோக்கில் வரலாறு கற்பித்தலில் அவர்களை ஈடுபடுத்துதலைத் தவிர்த்தல்.

**பாடத்திற்குப் பொறுப்பான ஆசிரியர்களுக்கான ஆலோசனைகள் :**

- ★ க.பொ.த. (சா.தர)த்திற்கு உரிய பாடத்திட்டத்தை பூரணப்படுத்தும் விதத்தில் கற்றல் கற்பித்தலை திட்டமிட்டு செயற்படுத்த வேண்டும்.
- ★ கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஆசிரியர் அறிவுரைப்புக் கையேட்டினை பரிசீலித்து அதனையும் கற்பித்தல் உபகரணமாகப் பயன்படுத்துவதில் அதிக கவனம் செலுத்துதல்.
- ★ கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் குறிப்பிட்ட தேர்ச்சி, பாட உள்ளடக்கம் என்பவற்றிற்குப் பொருத்தமான கற்பித்தல் முறையைத் தெரிவு செய்தல்.
- ★ இயன்றவரை கற்பித்தல் உபகரணங்களினூடாக எண்ணக்கரு அடைவிற்குச் சந்தர்ப்பம் அளித்தல்.
- ★ க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை தொடர்பான இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஆய்வு அபிவிருத்திக் கிளை மூலம் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு அறிக்கையைப் பரிசீலனை செய்து அதனைப் பாட அபிவிருத்தியின் பொருட்டுப் பயன்படுத்துதல்.
- ★ குறைந்த அடைவு மட்டத்தைக் காட்டும் பாடப் பகுதிகள் தொடர்பாக விசேட வேலைத்திட்டம், செயற்றிட்டம், ஒப்படை போன்வற்றை செயற்படுத்துதல்.

PAST PAPERS WIKI

3.2 **கற்றல் - கற்பித்தல் செயன்முறை பற்றிய கருத்துக்களும் ஆலோசனைகளும் :**

★ **கற்றல் - கற்பித்தல் மதிப்பீட்டு செயன்முறை என்பன மூலம் பெறுபேற்றில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் பொருட்டு மேற்கொள்ள வேண்டியவை :**

- கற்பித்தல் உபகரணங்களைப் பயன்படுத்தல்.
- பாட செயற்பாடுகளை ஆர்வமூட்டும் வகையில் ஒழுங்கு செய்தல்.
- திட்டமிட்ட களப்பயணங்களை ஒழுங்கமைத்தல். (பாடப் பரப்புடன் தொடர்புடைய)
- குறிப்பாக பாடநூல்களைக் கற்பதற்கு ஊக்கமளித்தல்.
- மாணவரின் ஆக்கங்களை (பாடத்துடன் தொடர்புடைய) வகுப்பில் காட்சிப்படுத்தல். சுவர்ப் பத்திரிகை, சஞ்சிகைகள், புதிர்கள், குறுவினாக்கள் ஆகியவற்றை தயாரித்தல்.
- வரலாறு பாடத்துக்கென அறை அல்லது ஒரு பகுதியை ஒதுக்கி அபிவிருத்தி செய்தல்.
- திறந்த நூல் பரீட்சைகளில் மாணவர்களை ஈடுபடுத்தி விடயங்களைத் தேடியறியச் செய்தல்.
- திருத்தமான புறவரிப்படங்களைப் பயன்படுத்துதல், படங்களின் தொகுப்பு நூல் தயாரிக்கச் செய்தல்.
- விடைகளை எழுதும்போது விடயங்களை ஒழுங்கமைத்தல், பயிற்சிகளைச் செய்வித்தல்.
- கிராமம், பிரதேசம், நாடு என்பவற்றின் வரலாற்று இடங்கள், நிகழ்வுகள் என்பவற்றை மரபு வழிக் கதைகள் போன்றன மூலம் தேடியறிந்து தகவல்கள் சேகரிப்பதில் மாணவர்களை ஈடுபடுத்துதல்.
- தொலைக்காட்சி, வானொலி, செய்திப்பத்திரிகைகளின் கல்வி நிகழ்ச்சிகள், கலந்துரையாடல்கள் கட்டுரைகள் ஆகியன மூலம் தகவல்கள் சேகரிப்பதில் மாணவர்களை ஈடுபடுத்தல்.
- பிரபல வரலாற்று அறிஞர்களின் உதவி பெறுதல்.
- நுண்மதிக் குழுக் கலந்துரையாடல், பாடசாலையினுள்ளேயும் வேறு பாடசாலைகளுடனும் இணைந்து ஒழுங்கமைப்புகளை ஏற்படுத்துதல்.

PAST PAPERS WIKI